பக்கங்கள்-16 | மார்கழி,20.2015 | விலை-30.00




நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

தினப்புயலில்
சிறப்பு விளம்பரம்
விசேட விலைக்
கழிவுடன்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க...
0778195947,
0776473692

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -151

## மூடி மறைக்கப்படும் தமிழினப் படுகொலைகள்



## வடபுலத்தில் பாலியல் தொழிலைத் திட்டமிட்டு அறிமுகம் செய்யும் சிங்கள அரசு





## இலங்கை வரலாற்றில் குறிப்பாக ராஜபக்ஷவின் காலத்தில்தான் பெரும் ஊடகக்கொலைகள் நடந்தன - ஈ.சரவணபவன்










Kandasamy Kovil Opposite / 165/ 5-A9, Kandy Road , Kilinochchi .P: 0774547728 / 0212285314 / 0212285315 / e-mail: ebnmulti@gmail.com

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூடி மறைக்கப்படும் தமிழினப் படுகொலைகள்




யுத்தம் நிறைவடைந்து வருடங்களைக் கடக்கின்றபோதிலும் காணாமல்போன உறவுகளின் நிலை இன்றும் விடைதெரியாத கேள்வியாகத் தான் இருக்கின்றது. உண்மையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு நாடகமே தவிர காணாமல்போன உறவுகளை கண்டுபிடிக்கவோ அல்லது அவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவோ இது உறுதுணையாக அமையாது என்று தான் கூறவேண்டும்.

அந்த வகையில் யாழில் கடந்த 14ம் திகதி தொடங்கிய முறைப்பாடுகள் நிறைவடைந்துள்ளது. இதில் காணாமல்போன உறவுகள் அனைத்தும் சாட்சி சொல்லியதா? என்ற கேள்வி மறுபுறம் எழுகின்றது. இவ்வாறான ஒருநிலையில் முதலாம் நாள் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 10 கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களுக்கான சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கடிதம் அனுப்பப்பட்ட 66 பேரில் 48 பேர்களின் சாட்சியமே பதிவு செய்யப்பட்டது. ஆனால் 106 பேர் சாட்சியமளிப்பதற்கு வருகை தந்து காத்திருக்க, ஆணைக்குழுவினர் எல்லோரையும் இன்றைய தினம் விசாரணை செய்யமுடியாது, இன்றைய தினம் அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே விசாரணை செய்யப்படுவார்கள் என்று கூற அதற்கு காணாமல் போன உறவுகளின் உறவினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஏன் எங்கள் பிள்ளைகள் காணாமல் போன உறவுகளுக்குள் அடங்கவில்லையா? நாங்கள் இறப்பதற்கு முன்னராவது எங்கள் பிள்ளைகளை கண்டுபிடித்துத் தாருங்கள், இன்று விசாரணை செய்யவில்லை என்றால் எப்போது விசாரணை செய்வீர்கள்? என ஆணைக்குழுவிடம் கேள்வி எழுப்பினர்.அதற்கு ஆணைக்குழுவினர் நான்கு நாட்கள் மட்டுமே யாழில் விசாரணைகளை மேற்கொள்ள வந்துள்ளோம். எனவே நாட்கள் போதாது எனக் கூறினார்கள். நாட்கள் போதாது என்றால் நாட்களை அதிகரிக்க வேண்டியது உங்கள் கடமை. கிளிநொச்சியிலும் அவ்வாறு தான் கூறிவிட்டு வந்துள்ளீர்கள் இங்கும் அதே பதிலை கூறுகின்றீர்கள் எங்களை ஏமாற்றாதீர்கள் என்று உறவுகள் கண்ணீரால் கேள்விகளைக் கேட்டனர்.

ஆனால் ஆணைக்குழுவினர் இதற்கு சரியான பதிலை வழங்காமல் முதல் நாளே மழுப்பத் தொடங்கிவிட்டார்கள். அந்த பதிலையே அடுத்த மூன்று நாட்களிலும் காணாமல் போன உறவுகளுக்கு கூறி தப்பித்துக் கொண்டனர். சாட்சிப் பதிவு ஆரம்பமாகியது. முதலாவது சாட்சிப் பதிவே இராணுவத்திற்கு எதிராகக் காணப்பட்டது. அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பின் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த றேகா (ரேகன்) என்பவரை இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் சிறிலங்கா இராணுவத்தினரிடம் தாம் ஒப்படைத்ததாக அவரது மனைவி பகிரங்கமாகத் தெரிவித்தார். அதற்கு ஆணைக்குழுவினர் நீங்கள் ஒப்படைத்த இராணுவ அதிகாரியினை அடையாளம் காட்ட முடியுமா? எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு என்னால் குறித்த இராணுவ அதிகாரியினை அடையாளம் காட்ட முடியும் என அவர் தெரிவித்தார். அவரது சாட்சி மிகப்பெரிய உண்மையினை இந்த அரசிற்கும், சர்வதேச நாடுகளுக்கும் வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் இராணுவத்தினரிடமே சரணடைந்தார்கள். அவர்களுடைய தற்போதைய நிலை என்ன என்ற கேள்வி எழுந்துவிட்டது.

அது ஒருபுறமிருக்க காணாமல் போன உறவுகள் தங்களுடைய உறவுகள் இவ்வாறு தான் காணாமல் போனார்கள் என்று ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க, ஆணைக்குழுவினர் ஒரு வெள்ளைத்தாளில் சிறுகுறிப்பு ஒன்றை எடுத்துக்கொள்வார்கள். இதுதான் காணாமல்போனவர்கள் விசாரணை.

அதேபோல அடுத்தநாள் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 13 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 59 பேர் சாட்சியத்திற்காக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 49பேர் சாட்சியமளித்திருந்தனர். அதேவேளை 93பேர் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். இங்கும் இராணுவத்தினருக்கு எதிராக சரமாரியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது, "நாவற்குழி இராணுவ அதிகாரியின் தலைமையில் கடந்த 1996.07.19 மறவன் புலவு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் எனது மகன்கள் இருவர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு தலையாட்டிமுன் நிறுத்தப்பட்டனர். ஒரு மகன் வீட்டில் நிற்கும்போது சுற்றிவளைப்பில் பிடிக்கப்பட்டதுடன் மற்றைய மகன் வயலில் வேலைசெய்துகொண்டு இருக்கும் போது அன்றைய தினமே பிடிக்கப்பட்டார். அவ்வாறு தலையாட்டியினால் அடையாளம் காட்டப்பட்டவர்களில் எனது மகன்மார் இருவரும் அடங்குவர். துமிந்த என்ற இராணுவ அதிகாரியின் தலைமையில் நடைபெற்ற சுற்றிவளைப்பிலேயே என் மகன் காணாமல் போனார். அவரைக்கேளுங்கோ எங்க பிடிச்ச பிள்ளைகள் எண்டு. ஏன் எங்களை இப்பிடி கேள்வி எல்லாம் கேட்கிறியள்" என ஒரு தந்தையார் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இறுதி இரு நாட்களும் சாட்சியமளிப்புக்கள் யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது. பதிவு நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. 04 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 67பேர் சாட்சியத்திற்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில் 54 பேர் சாட்சியமளித்தனர். அதேவேளை 245 பேர் சாட்சியமளிப்பதற்கு தயாராக இருப்பதாக பதிவுகளை மேற்கொண்டனர். . இதில் இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது மகள் குடும்பத்தை ஓமந்தையில் வைத்து இராணுவமும், கருணா குழுவைச் சேர்ந்தவர்களும் பிடித்து இழுத்துச் சென்றதைக் கண்டதாக உறவினர்கள் கூறினர். என் மகள் குடும்பம் ஐவரும் காணாமல் போனதுக்கு இராணுவமும், கருணா குழுவும் தான் காரணம் என தாயொருவர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

அடுத்து சரணடைந்தவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்பதால் வட்டுவாகலில் இராணுவத்திடம் எனது கணவர் சரணடையும் போது அவருடன் விடுதலைப்புலிகளின் முக்கிய பொறுப்பாளர்களும் சரணடைந்தனர் என அரசியல் துறை பொறுப்பாளர் யோகியின் மனைவி ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளார். அதுஒருபுறமிருக்க இறுதிநாள் சாட்சிப்பதிவுகள் யாழ். அரச செயலகத்தில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்களுக்கான சாட்சியங்கள், பதிவுகள் இடம்பெற்று முடிவடைந்துவிட்டன. நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 04 கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த 52பேர் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில் பிற்பகல் 1.30 மணிவரையில் 25பேர் சாட்சியமளித்திருக்கின்றனர். அதேநேரம் 278பேர் புதிதாக சாட்சியமளிப்பதற்கு தயாராக இருப்பதாக பதிவுகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் காணாமல்போன உறவுகளின் சாட்சிப் பதிவுகள் முடிவடைந்துள்ளது. இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் இன்றைய தினம் தனக்கு தலையிடிப்பதாகக் கூறி விசாரணையிலிருந்து வெளியேறிவிட்டார். உண்மையில் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.ஒருஆணைக்குழுவின்தலைவர் உறவுகள்தங்களுடைய உடன்பிறப்புக்கள், கட்டிய கணவன், பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த பிள்ளை போன்றவர்களை காணவில்லை என்றுதான் உங்களிடம் சொல்ல வந்தார்கள். ஆனால் உங்களிடம் சொல்லியும் பயன் இல்லை என்பதைப்போல் ஆகிவிட்டது ஆணைக்குழுவின் தலைவரின் நடவடிக்கைகள். இவ்வாறு நான்கு நாட்களும் காணாமல்போன உறவுகளின் கண்ணீரால் யாழ்.குடாநாடு நனைந்து விட்டது. இவ்வாறு உறவுகள் தங்கள் உறவுகள் தொடர்பான தகவல்களை ஆணைக்குழுவிற்கு வழங்கிவிட்டார்கள். ஆனால் சாட்சி சொன்ன உறவுகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா? விசாரணை செய்யப்படாமல் இருக்கும் உறவுகளை எப்போது வந்து விசாரணை செய்வது? காணாமல்போன உறவுகள் கூறிய சாட்சிகளுக்கு எவ்வாறான தீர்வு கிடைக்கப்போகின்றது? என்ற கேள்வி மறுபுறத்தில் எழுந்துள்ளது. ஆணைக்குழு முன்னர் சாட்சியமளித்த உறவுகளின் கதைகள் ஒவ்வொன்றும் எந்த ஒருதேசத்திலும் நடபெறாத உண்மைக்கதைகள். காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்த மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் அதன் அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளித்திருந்தது.

இந்நிலையில் குறித்த ஆணைக்குழுவின் விசாரணையின் போது முறைப்பாடு செய்யப்பட்ட வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் தற்போது தனியான விசாரணை மேற்கொள்ள குறித்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கென உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உள்ளடங்கிய ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. இக்குழுவின் விசாரணையில் சனல் 4 தொலைக்காட்சி அல்லது இந்த விசாரணை குறித்து ஆர்வமுள்ள தரப்பினர் அளிக்கும் சாட்சியங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் அடுத்த ஆண்டின் முற்பகுதிக்குள் வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவும் மெக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது. வெள்ளைக்கொடி விவகாரம், இசைப்பிரியா கொலை தொடர்பில் ஐந்து பேர் அடங்கிய நீதிபதிகள் குழு விசாரணை வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய வந்த விடுதலைப்புலிகள் படையினரால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக [illegible] அரசாங்க பத்திரிகை தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளது. காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விசாரணையை நடத்தும் என்று அதன் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்கான குழு விரைவில் அமைக்கப்பட்டு சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது சனல்4 தொலைக்காட்சியின் காணொளியும் கருத்திற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த விசாரணைக்காக ஐந்து பேரடங்கிய நீதிபதிகள் குழு அமைக்கப்படும். இந்தக்குழு பல மாவட்டங்களுக்கும் சென்று தகவல்களை திரட்டி தமது அறிக்கையை அடுத்த வருட முதல் பகுதியில் வெளியிடும் என்றும் பரணகம குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்தக்குழு இசைப்பிரியா படையினரால் கைது செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலும் தமது விசாரணைகளை நடத்தும் என்றும் பரணகம தெரிவித்துள்ளார். எனினும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் வெள்ளைக்கொடி ஏந்திவந்த விடுதலைப்புலிகள் கொல்லப்படவில்லை என்று கூறிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. வெள்ளைக்கொடி படுகொலை சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கை 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என அந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் குழு அறிவித்துள்ளது.

யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட தினமான கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வெள்ளைக்கொடியுடன் ஸ்ரீலங்கா அரச படையினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் உட்பட முக்கிய தளபதிகள் மற்றும் போராளிகள் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். வெள்ளைக்கொ[illegible] படுகொலை சம்பவத்தை மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கடந்த அரசாங்கம் முற்றாக நிராகரித்துவந்த நிலையில் கடந்த வாரம் ஸ்ரீலங்கா நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் குறித்த சம்பவம் தொடர்பிலான ஆதாரங்கள் உண்மைத்தன்மை வாய்ந்தவை என்றும், அவை தொடர்பில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. அது மாத்திரமன்றி இந்தச் சம்பவம் தொடர்பில் ஸ்ரீலங்காபிரதமர்ரணில்விக்கிரமசிங்கவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் பல புதிய தகவல்களையும் சிறிலங்கா நாடாளுமன்றில் வெளியிட்டிருந்தனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் வெள்ளைக் கொடி படுகொலை சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக காணாமல்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார். வெள்ளைக்கொடி படுகொலை குறித்த விசாரணைக்காக ஓய்வுபெற்ற பொலிஸ் உயர் அதிகாரியொருவரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த உயர் பொலிஸ் அதிகாரி சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள் தொடர்பில் நிபுணத்துவமிக்கவர் என்றும் மெக்ஸ்வெல் பரணகம குறிப்பிட்டுள்ளார்.

**இரணியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, வேது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## த.தே.கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தாதுவிடின் ஆபத்து

இலங்கையில் தமிழினத்திற்கெதிராக யுத்தம் நடைபெற்று 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இன்னமும் தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளது. கடந்த 30வருட போராட்ட காலத்திற்குள் இலங்கையரசு எவ்வாறு செயற்பட்டதோ அவ்வாறே தற்போதும் செயற்பட்டு வருகின்றது எனலாம். அப்படியெனில் தேர்தல் காலங்கள் வருகின்றபோது மாத்திரம் தமிழினத்திற்கான சலுகைகளை பட்டியலிட்டுக்கொண்டு அரசாங்கங்கள் முன்வந்தன. அதுபோன்றே கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் கூட மஹிந்த சிந்தனை மாறி. மைத்திரியின் 100நாள் வேலைத்திட்டம் என அதில் 100 விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதில் ஒருசில விடயங்களே நிறைவேற்றப்பட்டது. 75சத வீதத்திற்குமேல் இன்னமும் முழுமை பெறவில்லை. இந்த 100நாள் வேலைத் திட்டங்கள் 100நாட்களில் நிறைவடையும் எனக்கூறியே இப்புதிய அரசு அட்சி அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்தவின் அரசு தேர்தல் காலங்களில் முன்னெடுத்த முக்கியமான விடயங்களை தொடர்ந்தும் இப்புதிய அரசும் முன்னெடுத்து வருகின்றது. குடும்ப அரசியலை அடிப்படையாகக்கொண்டே மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டை ஆட்சிசெய்தார். அதுவே அவரது ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு [illegible]ணமாக அமைந்தது. கடந்தகால அரசின் குறைச்சாட்டுக்களை முன்னிலைப்படுத்தி மைத்திரியின் அரசானது ஆட்சியைக் கைப்பற்றியது. கைப்பற்றிய காலந் தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவில்லை. தமிழ் மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை. காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதுடன். வடபகுதி மீன்பிடி நடவடிக்கைகளில் பாகுபாடும். அத்துமீறி கடல் அட்டையினை பிடிப்பதனால் கடற்கரை வளங்கள் சூறையாடப்படுவதுடன். மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

சிறையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளது. பயங்கரவாதத்தினை தோற்கடித்துவிட்டோம் எனக்கூறிகொண்டிருக்கும் இவ்வரசாங்கம் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் [illegible]னிற்பது ஏன்? இதற்கிடையில் த.தே.கூட்டமைப்பையும். வடமாகாண சபையையும் பிரித்தாளும் செயற்பாட்டினை தொடர்ந்தும் ரணில் அவர்கள் மேற்கொள்கின்றார். இதனால் த.தே. கூட்டமைப்புக்கும். முதலமைச்சருக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் எழுந்துள்ளது. இந்நிலைமைகள் மாற்றப்படவேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இவர்களது ஒற்றுமையினை வலியுறுத்தவேண்டும். த.தே.கூட்டமைப்பு மற்றும் வடமாகாண சபையை அரசாங்கம்பிரித்துக்காட்ட முனைவது என்பது சர்வதேச அரசியலில் தமது வெற்றி இலக்கைநகர்த்துவதற்காகவே. இந்நிலைமை மாற்றப்படவில்லையென்றால் தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக சிங்கள அரசிற்கு ஒரு சாதகத்தன்மை ஏற்படுத்தப்படும். அது மட்டுமல்லாது வடமாகாணசபையில் அமைச்சுப்பதவிகளைப் பெற்றிருக்கும் அமைச்சர்கள் த.தே.கூட்டமைப்பினை மறந்துவிடக்கூடாது. த.தே.கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களே உங்களை இந்த அமைச்சுப்பதவிகளுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். பிரிவினைகளை உருவாக்குவதற்காக இவ்வரசாங்கம் இவர்களைப் பகடைக்காய்களாக்கும் நோக்கில் செயற்படுகிறது. பதவிகளை வழங்குவதன் ஊடாக தமிழ் அரசியல்வாதிகளை விலைக்குவாங்கலாம் என்ற எண்ணத்தில் அரசுசெயற்படுகின்றது. தமிழனைக்கொண்டே தமிழினத்தை அழித்தது. அதனையே மீண்டும் செயற்படுத்தத் துணிந்துள்ளது. மீண்டும் இவ்வாறான நிலை தொடர வேண்டுமா? தமிழினத்திற்காகக் குரல் கொடுப்பவர்களின் குரல்வளைகள் நசுக்கப்படுவதன் ஊடாக பிரிவினைகளை ஏற்படுத்தி அரசாங்கம் வெற்றி கண்டுவந்தது. அவ்வாறான தவறுகள் மீண்டும் இழைக்கப்படாது. த.தே.கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தி. தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

75

நாங்கள் இத்தாவில் பகுதியினுள் வந்த பின்பும் தொண்டைமானாறு நீரேரிக் கரையோரம் இரு முனைகளிலும் நின்ற மாலதி படையணியோடு சாவகச்சேரி நோக்கிய திசையைப் பார்த்தவாறு இரண்டும், ஆனையிறவை நோக்கிய திசையைப் பார்த்தவாறு இரண்டுமாக அவர்களுடையதும் எங்களுடையதுமாக நான்கு .50 கலிபர்கள் அவர்களுடன் நின்றன. குறிப்பிட்ட சில நாட்களின்பின் அவர்கள் அவற்றை எங்களிடம் அனுப்பினார்கள் என்றார் செய்தபடியே படையினர் பின்வாங்கினர்.

எறிகணை வீச்சுக்கு வழுத்திருத்தம் சொல்லிக்கொண்டிருந்த மேஜர் தமயந்தியின் பணியைப் படையினரின் எறிகணையொன்று நிறுத்திவிட்டிருந்தது. தலைவரிடமிருந்து வாங்கிய தொலைநோக்கி இரத்தத்தில் தோய்ந்தபடி அப்போதும் அவரின் கையிலேயே இருந்தது. இத்தாக்குதலில் பிளாட்டூன் கட்டளை அதிகாரியாக இருந்த தனுஷா விழுப்புண்ணடைய. யசோதினி பிளாட்டூன் கட்டளையதிகாரியாக விடப்பட்டார். ஒவ்வொரு மரத்தடியில் குவிந்து கிடந்தது. “இவ்வளவு கிட்ட வந்து இந்த வேலை செய்யிற அளவுக்குத் துணிச்சல்தானே” இன்னும் வலப்புறமாக நகர்ந்தனர். இருள் அதிகமாகிக்கொண்டு வந்தது. 50 மீற்றருக்கும் அப்பால் கதைக்கும் சத்தம் கேட்கவே, நின்று நிதானித்தனர். “பிள்ளைகளின் குரல் மாதிரியும்' கிடக்கு. அவை எங்க நிக்கினம்? நாங்கள் எங்க நிக்கிறம்? எதுக்கும் கிட்டப்போய் பார்ப்பம்” அவ்விடத்தை அணுகினர். விடயம் என்ன என்று பார்த்தால் எங்களுடைய ஒரு பிளாட்டூன் தனது முன்னரங்கை

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



கேணல் துர்க்கா. இப்போது இத்தாவில் பகுதியில் நீரேரிக்கரையிலிருந்து நெடுஞ்சாலையைத் தொடுவதாக நிலைகொண்ட தனுசா, கீர்த்தி, சாம்பவி ஆகியோரின் பிளாட்டூன்கள் தத்தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தன. தனுசாவின் அணி நின்ற பகுதி நீரேரிக்கரை என்பதால் அவதானிக்க முடியாத அளவுக்கு அடர்பற்றைகள் செறிந்திருந்தன. எனினும் நீண்ட தென்னந்தோப்புப் பகுதியில் ஏனைய இரு அணிகளும் நிலைகொண்டிருந்ததால் இங்கு எதிர்த்தரப்பை அவதானிப்புக்கு உட்படுத்துவது இலகுவாக இருந்தது. இருப்பினும் இதே வாய்ப்பு இராணுவத்துக்கும் இருந்தது.

கண்டற் பகுதியில் பெரும்பாலும் சத்தங்களை வைத்தே படையினரை அவதானிக்கவேண்டி இருந்தது. அப்பகுதியின் கடைசி நிலையான 54இல் செக்சன் கட்டளை அதிகாரியான கப்டன் யசோதினி நின்றார். அந்நிலைக்கு அருகே பற்றைகள் வளர்ந்திருந்த அகன்ற பாதை ஒன்று செல்கிறது. அதனூடாக எந்நேரமும் படைத்தரப்பு வரக்கூடிய வாய்ப்புகள் இருந்ததால் எம்மவர்களின் துப்பாக்கிகள் விழிப்பாக இருந்தன. “முன்னால ஏதோ சத்தம் கேட்குது” கூட இருந்தவர் சொல்ல, யசோதினியின் காதுகள் கூர்மையடைந்தன. “வருகினம் போலதான் கிடக்கு. எதுக்கும் ரெடியா இருங்கோ என்றவர், “ராங்கோ-01 யசோ, ராங்கோ-01 யசோ. முன்னுக்கு ஏதோ சிக்கல்போல கிடக்கு. எங்களிலிருந்து 100மீற்றரில் ஒருக்கா ஒழுங்குபடுத்தி வையுங்கோ என்றார். “சரி ஒழுங்குபடுத்துறம். வந்தால் நல்லாக் குடுத்துத்தான் அனுப்பவேணும்” கேட்ட இடத்துக்கு எறிகணை செலுத்தியை ஒழுங்குபடுத்தியவாறு சொன்னார் தர்ஷா.

நடைபேசி ஓய்ந்து சில நிமிடங்களில் திடீரென அருகில் வீழ்ந்து வெடித்தது ஒரு குண்டு. உடனேயே துப்பாக்கிகள் கனன்றன. படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை வைத்து அவ்விடத்துக்குக் குண்டுகளை எறிந்தார்கள். ஏற்கனவே சொல்லிவைத்தபடி வீழ்ந்து வெடித்தன எறிகணைகள். எல்லா நிலைகளும் தயார் நிலைக்குவர அடுத்த நிலையிலிருந்தும் சுடத்தொடங்கினார்கள். இதனால் கடுமையான எறிகணைத் தாக்குதலைச் அன்றையபொழுது சாய. கேணல் விதுஷாவின் கட்டளையின்பேரில் சாந்தி, அனுதா, லெப்.அபிநயா ஆகியோரைக் கொண்ட ஓர் அணி வேவு நடவடிக்கைக்குப் புறப்பட்டது.

50ஆவது நிலைக்கு அருகால் செல்லுகின்ற ஊரிப்பாதையால் உள்ளே நகர்ந்த இவர்கள் அவதானித்தவாறு மெல்ல மெல்ல முன்னே சென்றனர். மாலை மங்கும் நேரமாகையால் எல்லாமே ஓரளவு இருளாகத்தான் தெரிந்தது. படையினரின் சத்தம்கூடக் கேட்கவில்லை. 150 மீற்றருக்கு அப்பாலேயே அவர்கள் இருப்பதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருந்ததால் இன்னும் முன்னேபோனர்கள். நேரேயே போய்க்கொண்டிருந்ததால். எப்படியும் ஒரு 90மீ. வந்திருப்போம். இன்னும் ஒரு 10மீ. போவோம் என எண்ணியபடி முன்னே நகரப்போன சாந்தியை அபிநயா இழுத்துப்பிடித்து நிறுத்தினார். என்ன என்பது போலத் திரும்பிப்பார்த்த இவருக்குப் பச்சைக் கூரைபோட்ட கூடாரம் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். எல்லோரும் பற்றையருகே மறைந்திருந்து உற்றுப்பார்த்தனர். எந்தவித அசைவையும் காணவில்லை. தமது சத்தம் தமக்கே கேட்காதபடி மெல்ல நகர்ந்து கூடாரத்திலிருந்து 7 மீற்றரில் நிலை எடுத்துக்கொண்டனர். காயப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்ததற்கான தடயங்கள் காணப்பட்டன. நூலில் கட்டித் தொங்கவிடப்பட்ட சேலைன் போத்தல், நீண்டு இருந்த வயரில் ஓர் ஊசி, கீழே ஒரு படுக்கை விரிப்பு, இரத்தம் தோய்ந்த குருதித் தடுப்புப் பஞ்சணை எல்லாவற்றையும் பார்க்க, என்ன நடந்திருக்கும் என்பது உடனேயே விளங்கியது.

இனியும் மேலே செல்வது ஆபத்து என்று எண்ணியவாறு வலது பக்கவாட்டாக நகர்ந்தனர். முதலில் கண்ட அந்த அமைப்பு, இப்போது இன்னும் ஒரு மரத்தின் கீழேயும் செய்யப்பட்டிருந்தது. இரத்தத்தில் தோய்ந்த மேலங்கி எறியப்பட்டுக் கிடந்தது. ‘முறையாத்தான் வேண்டியிருக்கினம். இன்னும் என்ன மாதிரி என்று பார்ப்பம்' என நினைத்தவாறு விடயத்தை விதுஷாவுக்கு அறிவிக்க, மேலும்பக்கவாட்டாகநகருமாறு கட்டளை கிடைத்தது. அப்பாலே நகர, சாப்பிட்ட குறையில் மதிய உணவு பொதி பொதியாக முன்னே நகர்த்திக்கொண்டிருந்தது. அத்துடன் வேவு அணி பின்னே வந்தது. விடயம் கேணல் விதுஷாவுக்குச் சொல்லப்பட்டது. உடனேயே அணிகள் தயார்ப்படுத்தப்பட்டதுடன் மறுநாள் தாக்குதல் நடப்பின். அதை எதிர்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு பகுதியாக இராணுவம் முன்னேறும் முயற்சியைச் செய்யும் என்பது எல்லோருக்கும் தெரியும். இவ் இத்தாவில் கள வீழ்ச்சியிலேயே ஆனையிறவின் மீட்சி உள்ளது எனப் படைத் தலைமை நம்பியதால் சிங்களப் படைத்தரப்பின் திட்டம் செயலாகத் தொடங்கியது.

அன்றைய திகதி 02ஆக வழமை போல் விடிந்தது. எல்லாம் வழமைபோல் நடந்தன. ஆனால் வழமைக்கு மாறாகப் பகல்வரை ஆளில்லா உளவு விமானம் சுற்றிக்கொண்டிருந்தது. சித்திரை மாதத்து வெயில் பூமியை எரித்து விடுவதுபோல் தகித்தது. உயரம் குறைந்த, காற்றுப்புகவே சிரமப்படும் அந்தப் பற்றைகளின் கீழே நின்றவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது. நிழலும் சுட்டது. எனினும் வியர்வையைத் துடைத்தெறிந்தபடி வேலைசெய்தவர்களும். வியர்வையைத் வழிந்தோடவிட்டபடி சுடுபொறிக் குறியினூடே படையிரைத் தேடியவர்களுமாக இருக்க. நேரம் பண்ணிரண்டாகியது. ஆளில்லா வேவு விமானம் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருக்க, ஆனையிறவுநோக்கிய நீரேரியின் பக்கத்தால் ராங்கிகள், பவள்களின் இரைச்சல் கேட்டது. அத்துடன் தூரத்தே பேருந்துகளில் படையினரைக் கொண்டுவந்து இறக்குவது தெரிந்தது. யசோதினி உடனே லக்சனாவுக்கு, “சிறப்பு வந்து போகுது. நிறையப்பேரைச் சிறப்பில் கொண்டுவந்து இறக்கினம்” என அறிவித்தார். போராளிகளுக்காக இயங்கும் போக்குவரவுச்சேவை சிறப்புப் பேருந்துப் பணி என்ற பெயரால்தான் அழைக்கப்பட்டது. சண்டையில் இது படையினரின் ஊர்திகளைக் குறிக்கும் சங்கேதச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது.

அதேநேரம் ராங்கிகளின் இரைச்சல் நீரேரிக் கரைப்பக்க நிலையை நெருங்கத்தொடங்கியிருந்தது. உடனே யசோதினி RPGயை அனுப்பும்படி அறிவித்துக்கொண்டிருக்க. துப்பாக்கிகள் முழங்கத்தொடங்கின. நீரேரிக் கரைப்பக்கம் 2கி.மீ அகலத்தையும், யாழ்.நெடுஞ்சாலைப்பக்கம் 800மீ. அகலத்தையும், ஒட்டுமொத்தமாக 21/2கி.மீ. நீளத்தையும் கொண்டு தொண்டைமானாறு நீரேரிக்கு முதுகையும். கிளாலிக் கடல்நோக்கி முகத்தையும் காட்டியபடி நாக்குவடிவில் அமைக்கப்பட்டிருந்த இத்தாவில் BOX என்று சொல்லப்பட்ட அந்தப் பகுதியில் நீரேரிக் கரைப்பகுதி தவிர்ந்த ஏனைய மூன்று பகுதிகளிலும் படையினர் சூழ்ந்திருந்தனர்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 476. | வீ.வே.நிலமகள் | ரஞ்சினி கந்தையா | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 477. | வீ.வே.கண்ணகி | சசிகலா பெரியசாமி | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 478. | வீ.வே.கோலமதி | ஜெயப்பிரியா இராசரட்ணம் | வவுனியா | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 479. | வீ.வே.மலர்மதி | விஜயகலா அழகு | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 480. | வீ.வே.இறைஞ்சனா | அமராவதி சிவகாமி | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 481. | 2ஆம்.[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 482. | 2ஆம்.[illegible] | [illegible] | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தமிழ் சமுதாயம் அரசியலில் விழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையேல் சிங்கள மேலாதிக்கம் தலைவிரித்தாடும்

வேகமும், விவேகமும் மிக்க இளையவர்களால் முன்னெடுக்கப்பட்ட எமது விடுதலைப்போராட்டம் இன்று கடல் கடந்து, கண்டங்களைத்தாண்டி வியாபித்துள்ளது. தமிழினம் சிங்கள மேலாதிக்கத்தினால் அழிக்கப்பட்டபோது அதற்கெதிராக தமது உரிமைகளை நிலைநாட்ட, தமது சமூகம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திற்காக எழுபதுகளில் ஆயுதங்களை தமிழ் இளையவர்கள் கையிலே எடுத்தபோது, பல போராட்டக் குழுக்களாக உருவெடுத்தபோது அவர்களை நசுக்கிவிடலாம். ஒரு இரண்டு மூன்று நாட்களிலேயே அழித்துவிடலாம் என்று நையாண்டிசெய்தவர்கள் முப்பது வருடத்திற்கும்மேலாக அவர்களை வெல்லமுடியாமல் திணறியடித்துக் கொண்டிருந்தார்கள்.

எந்த ஒரு காலத்திலும் தமிழர்களின் பேச்சுக்கு செவிகொடுக்காத சிங்களமேலாதிக்கம் ஒரு சந்தர்ப்பத்தில் கைகட்டி தமிழர்கள் சொல்வதை கேட்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணமாக இருந்தவர்கள் தமிழ் இளையவர்கள். எவராலுமே முடியாது என்ற செயல்களை எல்லாம் எம்மால் முடியும் என்று செய்துகாட்டினார்கள். எப்போதுமே ஒப்பாரி சத்தம் கேட்ட தமிழன் தேசம் வீரமும், விவேகமும் மிக்க இளையவர்களின் வரவினால் வெற்றிவாகை சூடி விழாக்கோலம் கொண்டது.

தமிழன் என்றால் தமக்கு சேவகம் செய்யவேண்டிய அடிமைகள் என்று இறுமார்ந்துபோயிருந்த சிங்கள தேசம் தமிழர்களது பிரதிநிதிகளை நாய்கள் போல சித்தரித்தும் அவர்களை பொம்மைகள் என்று நையாண்டி செய்துகொண்டிருந்ததும் 1958ஆம் ஆண்டு தமிழர்களுக்காக குரல்கொடுத்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மூத்த தலைவர்கள் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்று. ஆனால் மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது. ஒரு காலகட்டத்தில் தமிழர்கள் பலமாக இருந்தபோது தமிழர்களைக்கண்டால் சற்றுதள்ளிநின்று பேசும் அளவு பயத்தையும், தமிழர்களின் பிரதிநிதிகளைக்கண்டால் (கோமத சேர்) என்று மரியாதையுடன் நலன்விசாரிக்கும் சூழலையும் உருவாக்கித்தந்தவர்கள் இளையவர்களே என்பதை மறுப்புக்கூற முடியாது. நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் வீரமிக்க இளையவர்களை எந்த சக்திகளாலும் இலகுவாக வென்றுவிட முடியாது. இதற்கு ஒரு சிறிய உதாரணம். ஒருகட்டத்தில் இந்தியாவில் தலைவர் பிரபாகரனும், முக்கிய உறுப்பினர்களும் அசோகா ஹோட்டலிலே இந்திய அரசால் சிறைவைக்கப்பட்டதைப்போல அடைத்துவைக்கப்பட்டு தமிழர்களுக்கு பாதகமான ஒரு ஒப்பந்தத்தினை புலிகள் தரப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ராஜிவ்காந்தியினால் நிர்ப்பந்திக்கப்பட்டபோது அதற்கு தலைவர் மறுப்புத் தெரிவிக்க, அன்றைய இந்தியப்படைகளுக்கு தலைமைவகித்த ஒருவர் தலைவர் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் இல்லையேல் தான் புகைத்துக்கொண்டிருக்கும் வெண்சுருட்டு அணைவதற்குள் ஈழத்தில் உள்ள அனைத்து போராளிகளையும் அழித்துவிடுவதாக ஒரு மிரட்டலை விட்டிருந்தார்.

ஆனால் இந்திய வல்லாதிக்க இராணுவத்திற்கும், புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டபோது அதையெல்லாம் சமாளிக்க முடியாமல் உலகத்தின் வல்லரசுநாடு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இந்தியா எப்படி திணறியடித்தது என்பதையும் இந்திய இராணுவம் சந்தித்த இழப்புக்களையும் இன்றுவரைக்கும் இந்தியா மறந்திருக்க மாட்டாது.

வீரமும் விவேகமும் மிக்க தலைவனின் பின்னே பல்லாயிரம் இளைஞர்கள் அணிவகுத்து நின்றதால் இன்று உலகம் முழுதும் தமிழர்களின் போராட்டம் பரவியுள்ளது. ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு தீப்பந்தத்துக்குச் சமன். தீமைகளை எரித்துவிடவேண்டிய அந்த தீப்பந்தங்கள் சிலவேளைகளில் தவறானவர்களின் வழிநடத்தலினால் பல வீடுகளையும் எரித்துவிடுகின்றது. பிரபாகரன் என்ற சிறந்த தலைமையின் கீழ் உருவாகிய எத்தனையோ வீரர்கள் தமிழினத்துக்காக எவ்வளவோ தியாகங்களையும், வீரதீரச்செயல்களையும் செய்துவிட்டு ஈழமண்ணின் விடுதலை வித்துக்களாக புதைந்துபோயுள்ளனர். ஆனால் பல இளைஞர்கள் பல தவறான தலைவர்களின் பின்னே சென்று சமூக சீர்கேடுகள், காட்டிக்கொடுப்புக்கள், சகோதரப்படுகொலைகள் என்பவற்றையெல்லாம் செய்துவிட்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோனார்கள்.

பிரபாகரன் என்ற தலைமையின் கீழ் நின்று நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் போராடிய வீரர்கள் உடல் சிதறி மண்ணிலே வீழ்ந்தார்கள். விடியாத சிறைகளிலும், வதை முகாம்களிலும் இன்றும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். தன் இனம் வாழவேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். எத்தனையோ இளையவர்கள் ஈவு இரக்கம் இன்றிக் கொலைசெய்யப்பட்டார்கள். இதுஎல்லாம் எதற்காக? தன் இனம் வாழவேண்டும் என்று அவர்கள் காட்டிலும், மேட்டிலும் கண்விழித்து, காவல்செய்தது தமக்காக அல்ல எமக்காக. எமக்காகப்போராடிய ஒரு சந்ததியே அழிக்கப்பட்டுவிட்டதே. நாங்கள் அவர்களுக்கு என்ன கைமாறு செய்யப்போகின்றோம்? எமக்காகப் போராடியவர்கள் இன்று வதைமுகாம்களிலே வதைபடுகின்றார்களே! என்ன செய்யப்போகின்றோம் அவர்களின் விடுதலைக்காக? எமக்காகப் போராடி கை, கால் இழந்து அங்கவீனர்களாக ஒருநேர உணவிற்கே வழியின்றித் தவிக்கின்றார்களே அவர்களுக்காக என்ன செய்யப்போகின்றோம்?

மேய்போன் இல்லாத மந்தைகளாக மாறிக்கொண்டிருக்கும் இளைய சமுதாயம் எல்லாம் முடிந்தது என்று கலைந்துசெல்ல இது சந்தை அல்ல, விடுதலைப்போராட்டம். சந்ததி சந்ததியாகதொடர்ந்துவரும் உன்னதமான போராட்டம். ஒரு சந்ததி அகிம்சை ரீதியாகப்போராடிக் களைத்துப்போய் இறுதியில் இரத்தமும் சிந்தி அதை அடுத்த சந்ததியிடம் கொடுத்துவிட்டு வீழ்ந்து போனது. அடுத்த இரண்டு சந்ததிகள் ஆயுதங்களை ஏந்தி வெற்றிவேல் வீரவேல் என்று வீரமுழக்கமிட்டு போராடி தமிழினத்தின் அடையாளத்தினை உலகறியச்செய்துவிட்டு பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்ற பழிச்சொற்களுடன் பல தியாகங்களையும், விட்டுக்கொடுப்புக்களையும் செய்து உயிர்பிரியும் தருணத்திலும் இனவிடுதலைக்காகவும், தம் அடுத்த சந்ததி நிம்மதிக்காகவும் சுதந்திரமாகவும், வாழவேண்டும் என்ற எண்ணத்துடனும் போராடி வீழ்ந்துபோனார்கள். ஆனால் தாம் விழும்போது தமது சுவடுகளைத் தொடர்ந்து அடுத்த சந்ததி போராடும் என்ற நம்பிக்கை மட்டும் அவர்களிடம் உறுதியாக இருந்தது. ஆனால் இன்றைய இளைய சமுதாயம் என்ன செய்கின்றது? தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த உன்னதமான விடுதலைப்போராட்டத்தினை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுக்கப்போகின்றது அதற்காக என்ன செய்கின்றது?

போராளிகள் அழிக்கப்பட்டால் போராட்டம் அழிந்துவிடும் என்று விடுதலைப்புலிகளை சர்வதேசத்துடன் இணைந்து அழித்தொழித்தது சிங்களதேசம். ஆனால் போராட்டத்திற்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவரைக்கும் போராளிகள் உருவாகிக்கொண்டே இருப்பார்கள் என்பதை சிங்களதேசம் இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை. அதனால்தான் போர் முடிந்து ஆறு ஆண்டுகளாகியும் புலிகள் புலிகள் என்று பல தடைகளையும், சட்டதிட்டங்களையும் தமிழர்களுக்கு எதிராக உருவாக்கிக்கொண்டே இருக்கின்றது. ஆனால் அதையெல்லாம் தகர்த்தெறிந்து எமதுபோராட்டத்தினை முன்னெடுக்கவேண்டிய இன்றைய இளைய சமுதாயம் இன்று மேய்ப்போன் இல்லாத மந்தைகளாக திசைமாறிச்செல்லத் தொடங்கியுள்ளன. பச்சைகள் எல்லாம் பசுமை என்று பாசிகளில் காலைவைத்து வழுக்கி விழுந்துகொண்டிருக்கின்றது. எமது எதிரி யார் நண்பன் யார் என்பதைக்கூட மறந்துவிட்டு தவறான பாதையிலே செல்லத்தொடங்கியுள்ளது.

எமது போராட்டத்தினை இன்னும் வேகமாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய இளையவர்கள் இன்று தமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதாக எண்ணத் தொடங்கியுள்ளனர். இரவு பகல் நடமாட்டமும், செல்பேசியும், இணையவசதிகளும், சாராயக் கடைகளும்தான் சுதந்திரமா? காலங்காலமாக எம் இனத்தினை கொலைசெய்ய சிங்கள இராணுவம் தூக்கிவந்த சிங்கக்கொடிகளை தமது கைகளிலே தூக்கிப்பிடிக்கின்றனர் சில இளையவர்கள். காலகாலமாக தமிழனை தன் கால்களால் மிதித்து வதைத்த சிங்கள கொலைவெறி இராணுவத்துடன் (மச்சான்) என்று உறவாடத்தொடங்கிவிட்டது. இனி தமிழினத்தின் தலைவிதி என்னவாகப்போகின்றதோ என்ற ஏக்கம் இப்போது தலைதூக்கிக் கொண்டிருக்கின்றது.

நூறு இளைஞர்களைத் தாருங்கள் இந்த நாட்டையே மாற்றிக்காட்டுவேன் என்று விவேகானந்தர் கூறினார். இளையவர்களின் சக்தி மிக மிக பலம் வாய்ந்தது. எனவே உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட எமது இனவிடுதலைப்போராட்டத்தினை வேகமாகவும், விவேகமாகவும் முன்னெடுத்துச்செல்லவேண்டியவர்கள் இளைஞர்களாகிய நீங்கள். போராட்டம் என்றால் ஆயுதத்தினை தூக்கவேண்டும் என்றோ இரத்தம் சிந்தவேண்டும் என்றோ இல்லை. அதையெல்லாம் எமக்கு முந்தைய சமூகம் செய்துவிட்டன. அதை மீண்டும் செய்யவேண்டியதேவை இப்போது இல்லை. ஆனால் அகிம்சை ரீதியாகப் போராடவேண்டிய கட்டாயம். இப்போது அரசியல் ரீதியாகப் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தில் தமிழர்கள். மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவேண்டியது ஒவ்வொரு இளைஞர்கள் யுவதிகளின் தலையாய கடமை. இதனைச்செய்ய மறுத்தால் வரலாறு உங்களை மன்னிக்காது.

அன்றைய மஹிந்த அரசு உலக நாடுகளின் போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்ளவே அபிவிருத்தி அபிவிருத்தி என்று ஒரு மாயையினை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. உண்மையான அபிவிருத்தியினை இன்னும் அடிமட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் சாதாரண மக்கள் அனுபவிக்கவில்லை. வசதி படைத்தவர்களுக்கும், பதவிகளில் இருப்பவர்களும் மட்டுமே அபிவிருத்தி என்பதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான அபிவிருத்தி என்றால் என்ன? நாட்டின் அனைத்து மக்களையும் அது சென்றடையவேண்டும். வறுமை ஒழிக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படவேண்டும். புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படவேண்டும். குடிசைக்கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். இதிலே எதையுமே கடந்த அரசு செய்யவில்லை. அப்படி இருக்கும்போது எவ்வாறு அபிவிருத்தி பற்றிப்பேசமுடியும். சீனாவிடம் கடன்வாங்கி வாங்கி எத்தனையோ நாடுகளிடம் நாட்டை அடகுவைத்து வீதிகள் போடப்பட்டால் எமக்கு விடுதலை கிடைத்துவிட்டதாக எண்ணிக் கொள்வது முறையாகுமா?

வரி என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பது உண்மை. ஆனால் எங்கள் முதுகெலும்புகளையே வரியாகக்கேட்கும் இந்த அரசுக்கு துணைபோவது எந்த விதத்தில் நியாயமாகும். வரம்புகள் உயர்த்தப்படாமல் ஒருபோதும் நல்ல விளைச்சல் கிடைக்காது. நாட்டின் வரம்புகளாக இருக்கக்கூடிய சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படாமல் இந்த நாடு அபிவிருத்தியடைகின்றது. நாடு வளர்ச்சியடைகின்றது என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும். இதனை இளைய சமுதாயம் நன்றாகப்புரிந்துகொள்ளவேண்டும்.

தொடரும் பருவமழையால் இடம்பெயர்ந்த மக்கள் ஏராளம். கூலி வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் வேலையில்லாமல் தவிக்கின்றான். அடுப்பு எரிவதற்குப்பதிலாக ஏழைகளின் வயிறு எரிகின்றது. என்ன செய்தது அரசாங்கம். அரச ஊழியர்களுக்கு 30[illegible] ரூபா சம்பளம் அதிகரித்தது. நாட்டிற்காக வயல்களை உழுது வேளாண்மை செய்யும் விவசாயிக்கும், உடல்வருத்த உழைக்கும் கூலித்தொழிலாளர்களுக்கும் என்ன இலாபம் இதனால்? குறைந்த பட்சம் அடைமழையினால் வேலை இன்றி தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 கிலோ அரிசி பருப்பு என்றாலும் கொடுக்க முடியாத இந்த சுயநலவாத அரசாங்கம் அபிவிருத்தியைப்பற்றிப் பேசுவதற்கே தகுதியற்றது என்றுதான் கூறவேண்டும். இந்த நாட்டின் மூத்த பிரஜைகள் என்று கௌரவிக்கப்படும் முதியவர்களுக்கு இந்த அரசாங்கம் ஒருமாதம் வெறும் 200 ரூபாவைத்தான் கொடுக்கின்றது. 200 ரூபாவிற்கு இந்த நாட்டிலே தற்கொலைசெய்ய நஞ்சுப்போத்தல் கூட வாங்கமுடியாது.

இளையசமுதாயம் எப்போது[illegible] சரியான அரசியல்த்தெளிவுடனும், விழிப்புடனும் இருக்கவேண்டும். சலுகைகளுக்கு ஆசைப்பட்டு அடுத்த சந்ததியை அடகுவைத்தார்கள் என்று வரலாறு இழிவாகப்பேசும் அளவு நடந்துகொள்ளக்கூடாது. எமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை நன்றாகப்புரிந்துகொள்ளவேண்டும். இனத்துரோகிகளின் சூழ்ச்சி வலைகளுக்குள் சில இளைஞர்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த தேர்தல் பிரச்சாரக் காலங்களில் தமிழின அழிப்பின் வெற்றியாளராக்கப்பட்ட மஹிந்தவின் சுவரொட்டிகளைக் கையிலே தூக்கிக்கொண்டு எத்தனையோ தமிழ் இளையவர்கள் புறப்பட்டனர்.

கொலைகாரனுக்கு கொடிபிடிக்கும் இழிவான செயல்களை ஈழமண்ணின் விடுதலைக்காகப் போராடவேண்டியவர்கள் செய்யத் தொடங்கிவிட்டனர். மஹிந்த வந்துதான் பாதை திறந்துவைத்தார். மஹிந்த வந்துதான் வீடுகள் கட்டித்தந்தார் என்று அதற்கு நன்றிக்கடன் செலுத்த புறப்பட்ட இளையவர்கள் தாம் தம் இனத்தைப சிங்களப்பேரினவாதிகளிடம் அடமானம் வைக்கின்றோம் என்பதைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

தமிழின அழிப்புக்குத் துணைபோன கூட்டுக்கொலையாளிகள், இனத்துரோகிகள் என எமக்கு அநீதி செய்தவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு செயற்படத் தொடங்கியுள்ளனர் சில இளைஞர்கள்.

12ஆம் பக்கம் பார்க்க...

கதிரவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாற்றில் குறிப்பாக ராஜபக்ஷ காலத்தில்தான் பெரும் ஊடகக் கொலைகள் நடந்தன - ஈ.சரவணபவன்



"இலங்கை வரலாற்றில் குறிப்பாக, ராஜபக்ஷ காலத்தில்தான் பெரும் ஊடகக் கொலைகள் நடந்தன. அவை பல வகையில் நடத்தப்பட்டன. ஊடகங்களைத் திணறடிக்கும் வகையில் நடந்தன. குறிப்பாக, ராஜபக்ஷ நடத்திய இனப் படுகொலையை, ஊழல் அரசியலைத் தங்குதடையின்றி மேற்கொள்ள அவர் ஊடகங்களின் குரலை நசித்தார்." இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஊடகத்துறை. நாடாளுமன்ற விவாதம் ஆகிய அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த காலத்தில் நடந்த ஊடகச் சுதந்திர மறுப்பை முடிவுக்குக்கொண்டுவந்து, ஊடக உரிமையை நிலைநாட்டுவதாக புதிய அரசைச் சார்ந்தவர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தனர். மைத்திரிபால சிறிசேன ஊடகச் சுதந்திர மறுப்பால் மற்றும் ஊடகக் கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் சென்று. அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் இவ்வாறு வாக்குறுதியளித்தார். எனவே, கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஊடகச் சுதந்திர மறுப்புக்களுக்குப் பொறுப்புக்கூறும் விதமாக. அச்சம்பவங்களுடனும். கொலைகளுடனும் தொடர்புடைய குற்றவாளிகளைப் புதிய அரசு சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

இலங்கையில் நடந்த மிக மோசமான மனித உரிமை மீறல்களை மறைப்பதற்காக. மிக மோசமான ஊடகச் சுதந்திர மீறல்களில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில். இலங்கையின் புதிய அரசு வெளிப்படையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்காதபட்சத்தில், அந்த ஊடகச் சுதந்திர மறுப்பை. புதிய அரசும் ஓர் அரச இயந்திரமாகச் சாதுரியமாக மறைக்கிறது என்பதையே நாம் முடிவுசெய்ய நேரிடும். ஏனெனில், முன்னைய காலத்தில் இலங்கை அரசே ஊடகச் சுதந்திரத்தை மறுத்து. ஊடகக் கொலைகளைப் புரிந்தது அல்லது தனக்குச் சார்பான குழுக்களை வைத்து அக்கொலைகளை நடத்தியது என்பது யாவரும் அறிந்ததே.

நாம் கடந்த காலத்தில் நடந்த ஊடகச் சுதந்திர மறுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அப்படி என்றால். இப்போது ஊடகச் சுதந்திரம் நிலவுகின்றதா? ஆட்சி மாறியும் ஊடகச் சுதந்திரம் இல்லை. குறிப்பாக. இராணுவமும். இராணுவத்தின் புலனாய்வுக் கட்டமைப்புக்களும் தொடர்ந்தும் ஊடகங்களைக் கண்காணித்து வருகின்றன. இந்த நிலை இன்னமும் தொடர்வது கவலையளிக்கின்றது. அத்துடன். பல ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர். மறைமுகமாக அச்சுறுத்தப்படுவதும் இனந்தெரியாத குழுக்கள் அச்சுறுத்துவதும் தொடர்கின்றன. ஊடகச் சுதந்திரம் குறித்து நம்பிக்கையற்ற. நிச்சயமற்ற ஒரு சூழலே நிலவுகிறது. இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாடு என்ற வகையில். தொடர்ந்தும் ஊடகச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இன்று வடக்கு. கிழக்கில் நுட்பமான விதங்களிலும் ஊடகச் சுதந்திர மறுப்பு நிலவுகின்றது.

ஊடகச் சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டியது ஒரு அரசின் கடமை. ஆனால். அந்த அரசே ஊடக சுதந்திர மீறல்களைப் பாதுகாக்கின்றது. அந்த அரசே ஊடகச் சுதந்திரத்தை நுட்பமாக மீறுகின்றது. அந்த அரசின் இயந்திரமான இராணுவமே ஊடகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சியை முன்னெடுக்கிறது. ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊடக அமைப்புக்கள் கோரிக்கைவிடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களும் ஊடகவியலாளர்களைக் கொன்று குவித்தவர்களும் இன்றும் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடித் திரியும்போது. ஊடகவியலாளர்கள் எப்படி முழுச் சுதந்திரத்துடன் செயற்படமுடியும்? அவர்களின் மனங்களில் இருந்து எப்படி அச்சம் விலகும்? ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் ஊடக நிறுவனங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படாத வரைக்கும் எப்படி முழுமையான ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்படும்? காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் வழக்கையும், 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கையும் மட்டுமே இந்த நல்லாட்சி அரசு விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

அது நல்ல விடயம். அந்த வழக்குகளில் குற்றவாளிகள் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். உலகின் கவனத்தை ஈர்த்த அந்த வழக்குகளில் மட்டும்தான் அரசு அக்கறையாக இருந்துகொண்டு மற்றைய சம்பவங்களைப் புறக்கணிப்பது ஏற்புடையதல்ல. நீங்கள் நல்லாட்சி என்றுதான் மக்களுக்கு வாக்குறுதியளித்தீர்கள். ஊடகங்கள் மீதும். உடகவியலாளர்கள் மீதும் எத்தனையோ தாக்குதல்கள் கடந்த காலங்களில் நடந்திருக்க, இரண்டு வழக்குகளை மட்டும் விசாரிப்பது குற்றவாளிகளைக் கட்டுப்படுத்த உதவாது. இது சும்மா மக்களுக்கும் உலகத்திற்கும் காட்டுவதற்கான நடவடிக்கை மட்டுமே! எனவே, அனைத்து தாக்குதல்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் [illegible] அத்தனை வழக்குகளும் விசாரிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அனைத்தையும் உடனடியாகச் செய்ய முடியாது என்று இந்த அரசு கருதினால், அவற்றை எப்போது செய்து முடிப்பது என்கிற கால அட்டவணை ஒன்றை அரசு அறிவிக்கவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நம்பிக்கை வரும். ஊடகவியலாளர்களுக்கு நம்பிக்கை வரும். ஊடக நிறுவனங்கள் துணிந்து சுதந்திரமாகச் செயற்பட முன்வரும். இவையெல்லாம் இல்லாமல் முழுமையான ஊடக சுதந்திரம் என்று கூறுவது வெறும் கண்துடைப்பாகத்தான் அமையும்.

கொழும்பிலிருக்கும் ஊடகங்கள் எதிர்கொள்ளாத, எதிர்கொள்ளவே முடியாத பயங்கரங்களையெல்லாம் யாழ்ப்பாணத்து ஊடகங்கள்தான் எதிர்கொண்டிருக்கின்றன. அரச பயங்கரவாதம் உள்ளிட்ட எல்லா வன்முறைகளையும் அவைதான் கடந்த காலங்களில் எதிர்கொண்டிருந்தன. ஆனால். அவைகுறித்து ஒரேயொரு விசாரணைகூட கடந்த 06 மாதங்களில் இந்த நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படவில்லை.

இலங்கைவரலாற்றிலேயே முதன் முதலில் ஊடக நிறுவனமொன்றுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைச் சுட்டுக்கொன்று சொத்துக்களுக்கெல்லாம் தேசம் விளைவித்த சம்பவம் 2006ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் நாள் சர்வதேச ஊடக சுதந்திர தினமான மே 03 ஆம் திகதிக்கு முதல் இரவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்த ஆயுததாரிகள் வெறியாட்டம் நடத்தி இரண்டு ஊழியர்களைக் சுட்டுக் கொன்றார்கள். 3 பேரைக் காயப்படுத்தினார்கள்.

ஒரு கோடி ரூபா அளவிலான சொத்துக்களை நாசமாக்கினார்கள். இலங்கையின் ஊடக வரலாற்றையே அதிர்ச்சியால் புரட்டிப்போட்ட இந்தச் சம்பவம் குறித்து இதுவரையில் எந்த விசாரணையும் இல்லை. இந்த நல்லாட்சி அரசின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தத் தாக்குதல் இராணுவத்தினரின் ஆசீர்வாதத்துடனும். ஆதரவுடனும்தான் நடத்தப்பட்டதென்றாலும் அதனை நேரடியாகச் செய்தவர்களின் தலைவர். தாக்குதலின் சூத்திரதாரி முன்னைய ஆட்சியில் அமைச்சராக இந்தச் சபையில் இருந்தார். இன்று நாடாளுமன்ற உறுப்பினராக சுதந்திரமாகச் செயற்படுகிறார்.

தான் செய்த கொலைகளுக்காக. ஊடக நிறுவனங்களைத் தாக்கியமைக்காகத் தன்மீது வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படுமென்றோ. சிறையில் அடைக்கப்படுமென்றோ எந்த அச்சமுமின்றி இங்கு அமர்ந்திருக்கும்போது, வெளியே ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் எப்படி முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்? அந்தக் குற்றவாளி அரசின் பங்காளிக் கூட்டணி ஒன்றிலேயே உப தலைவராக இருக்கும்போது ஊடகவியலாளர்களால் எப்படி சுதந்திரமாகச் செயற்பட முடியும்? நல்லாட்சி அரசின் கீழும் இப்படியான குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்கின்றபோது ஊடகவியலாளர்களால் எப்படி முழுமையான சுதந்திரத்துடன் செயற்படமுடியும்? எல்லா ஆட்சிகளும் இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்துகொள்ளும்போது ஊடகவியலாளர்கள் சுய தணிக்கைக்குள் கட்டுண்டு கிடப்பதைத்தவிர வேறு என்ன வழிவகை இருக்கப் போகிறது? இப்போதும் அதுதான் நடந்துகொண்டிருக்கின்றது. தாங்கள் விரும்புபவற்றை எழுதவோ, [illegible]ர் ஒன்றுக்குப் பல தடவை யோசிக்க வேண்டியவர்களாகத்தான் ஊடகவியலாளர்கள் இருக்கின்றனர்.

அந்த நிலைமை மாற வேண்டுமென்றால் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அந்த விடயத்தில் இந்த அரசு நேர்மையுடன் செயற்படவேண்டும். வடக்கில் பிரபல ஊடகவியலாளராக விளங்கிய நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர்கள் சட்டமா அதிபரின் சம்மதத்துடன் பிணையில் விடப்பட்டனர்.

இவ்வழக்கில் பிரதான எதிரியான ஈ.பி.டி.பி உறுப்பினர் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றுவரை அவர் கைது செய்யப்படவோ அல்லது அவரைக் கைது செய்ய 'இன்டர்போல்' அமைப்பைக் கோரவோ நடவடிக்கைஎடுக்கப்படவில்லை. கிழக்கில் ஊடகவியலாளர்கள் சுகிர்தராஜன், நடேசன் போன்றோரின் கொலைகளுக்கும் நீதி கிடைக்கவில்லை.

இதுபோன்று ஏராளமான தமிழ் ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் நீதியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றன. இந்த அரசாவது அதனை செய்யுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால். இந்த அரசு அதில் இன்னமும் அக்கறை காட்டவில்லையென்பது கவலைக்குரியது. கடந்த 10 வருடங்களில் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதற்கும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதற்கும் மேலாக வடக்கு. கிழக்கில் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால். இந்த அரசு அவற்றில் ஒன்று குறித்துக்கூட இதுவரையில் விசாரணை நடத்தியதில்லை. ஏன்? தமிழ் ஊடகங்கள் அல்லது தமிழ் ஊடகவியலாளர்கள் என்ற பாரபட்சமா? இந்தப் பாரபட்சம்தான் கடந்த 60 ஆண்டுகளாக இந்த நாட்டைச் சீரழித்தது என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டின் ஏனைய சேவைத் துறையினரைப் போலவே ஊடகவியலாளர்களும் நாட்டுக்கும். நாட்டு மக்களுக்கும் பணிபுரிகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் தமது உயிர்களைப் பணயம் வைத்துப் பணிபுரிகிறார்கள். ஏதோ செய்திகளை எடுத்துப் பிரசுரித்துவிட்டு அல்லது வெளிப்படுத்திவிட்டு அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதாக எவரும் நினைப்பார்களானால் அது மிகவும் தவறான விடயமாகும். அன்றாட வாழ்வில் அவர்களும் மற்றவர்களைப்போலவே கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் இருக்கின்றார்கள். குடும்பப் பொறுப்புக்கள் இருக்கின்றன. வீட்டுப் பிரச்சினை. போக்குவரத்துப் பிரச்சினை என்று நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்கள் வெளியிடும் செய்திகள், கட்டுரைகள், படங்கள் போன்றவற்றுக்கு எத்தனையோ விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஆபத்துக்களைச் சந்திக்கின்றார்கள்.


இரவு, பகல் பார்க்காமல் உழைக்கின்றார்கள். பல வேளைகளில் சரியான நேரத்தில் சரியாக சாப்பிடாமல் ஒரு பணிஸ், ஒரு வடையைச் சாப்பிட்டுவிட்டு. தேநீர் கோப்பையை அருந்திவிட்டு கடமை புரிகின்றார்கள். சில வேளைகளில் அதிகாரிகளின் கோபம், படையினரின் தாக்குதல், பொலிஸாருடன் முறுகல் என தம் வாழ்க்கையை எப்போதும் ஆபத்துக்குள்ளாக்குகின்றார்கள். இவைகளைக் கவனித்து அவர்களுக்கும் உதவிகளை அளிக்க வேண்டும்" என்றும் தனது உரையில் தெரிவித்தார்.

சுழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஒரு பகிரங்க மடல்

## -சிரேஷ்ட ஊடகவியலாளர் ராஜாஜி ஸ்ரீதரன்



ஈழத்தமிழர்களின் அரசியல் நெருக்கடிக்கான தீர்வானது தமிழ்த்தலைமையில் ஏற்பட்டிருக்கும் அதிகாரப்போட்டி காரணமாக இந்த தடவையும் கிட்டாது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. முதல்வர் விக்னேஸ்வரன்-சுமந்திரனுக்கு இடையேயான உச்சக்கட்ட முறுகல் நிலையும் இது விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் காட்டும் தொடர் மௌனமும் இந்த அச்சத்தை அதிகரிக்கின்றன. ஈழத்தமிழினத்தின் தற்போதைய தலைமையான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒற்றுமையை தலைக்க முற்படுவதன் மூலம் நீண்ட கால அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது கடினமாகலாம் என்று உலக [illegible] நாடான அமெரிக்காவும் [illegible] தலைமை நாடான இந்தி[illegible] கொண்டிருப்பதாக இந்[illegible] இந்தியா எக்ஸ்பிரஸ் வெளி[illegible]தும் செய்தியே இன்று மிகுந்த கவனம் பெறுகிறது. தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான திட்டங்களை வகுத்ததை விட தமது அதிகாரத்தையும் தலைமைத்துவத்தையும் தக்க வைப்பதற்கான முனைப்புகளிலேயே மூத்த தலைவர்கள் அதிக கவனம் செலுத்துவதை வேதனையுடன் அவதானிக்கிறோம்.

இன்றைய குழப்பமான சூழ்நிலைக்கு உகந்த பதிலளித்து உடனடித்தீர்வை காணவேண்டிய பொறுப்பு முதல்வர் விக்னேஸ்வரன், சுமந்திரன் மற்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் உள்ளது. ஈழத்தமிழினத்துக்கு ஒரு கூடுதல் பலமாக அரசியலுக்கு இழுத்துவரப்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரனின் அண்மைக்கால நகர்வுகள் தமிழினத்தின் அரசியல் திடத்தை பலவீனப்படுத்தும் வகையில் அமைவதாக பல்வேறு மட்டங்களில் அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது. தற்போது கூட்டமைப்பின் முரண்பாடுகள் அனைத்துலக முக்கியத்துவம் பெற்றுவிட்டதால் இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இவ்வாறான திறந்த மடலை எழுதவேண்டும் என்ற தேவை எழுந்திருக்கிறது. முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களே தமிழினத்தின் நியாயமான கேள்விகளுக்கு பதிலளிப்பதுடன் தங்களது நகர்வுகளினால் புதிய நெருக்கடிகள் ஏற்பட்டு தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விவகாரத்தில் இழுபறிகளுக்கு காரணமாகாது தவிர்த்துக்கொள்ளும் பொறுப்பும் முதலில் உங்களுடையதாகிறது.

ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உங்களுக்கும் இடையேயான இடைவெளியை முதன்முதலில் காண்பித்தது தாங்களே. தமிழ் மக்களின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் வேளையில் தமிழ் தலைமையை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும் இந்திய அரசும் அமெரிக்காவும் தங்களிடம் நேரடியாக கோரிக்கை முன்வைக்குமளவுக்கு உட்தரப்பு விடயங்களை தாங்கள் உலக மட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பிராந்திய வல்லரசு நாடான இந்தியாவிடமும் உலக வல்லரசு நாடான அமெரிக்காவுடனும் பேச்சு நடத்தவேண்டிய பொறுப்பான பதவியில் உள்ள தங்களிடம் உங்கள் மக்களின் உரிமைக்காக பொறுப்புடன் செயற்படுங்கள் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கும் அளவிற்கு தாங்கள் தாழ்ந்து சென்றிருப்பதை உணருகிறீர்களா?

இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கு காரணமான தங்களுக்கு தமிழினத்தை தலைமை தாங்கும் தகுதி உள்ளதென்று மானசீகமாக கருதுகிறீர்களா? கடந்த சில நாட்களுக்கு முன்னர் சுமந்திரனுக்கு பதில் கடிதம் என்ற அறிக்கையை வெளியிட்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைக்கு உங்களால் கட்டுப்பட முடியாது என்று கூறி அதற்கு பல்வேறு காரணங்களை காண்பித்திருந்த [illegible] இன்று எவ்வாறு கூட்டமைப்பின் உள் நெருக்கடியை பேசித்தீர்க்க முடியும் என்று இந்திய அமெரிக்க பிரதிநிதிகளுக்கு வாக்குறுதி வழங்க முடிந்தது என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்துவீர்களா? விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு தமிழர்களின் உரிமையை வென்றெடுக்கும் விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் எவராலும் எதிர்வு கூற முடியாத நிலையில் இருந்த போது ஒரேயொரு நம்பிக்கை ஒளியாக தென்பட்டது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்னும் அரசியல் தலைமை மட்டுமே என்பதை தாங்கள் அறிவீர்கள்.

இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த தமிழர் தாயகப்பகுதிகளை போரின் பின்னர் நிர்வாக ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்கு இருந்ததும் வட மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தி அதை வழிநடத்துவதற்கு தகுந்த தலையாளியை தேடவேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு இருந்ததும் உங்களுக்குத் தெரியும். ஆற்றல், ஆளுமை, நேர்மை ஆகியவற்றை மட்டுமே மதித்து பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தங்களை நியமித்து அரசியல் வாழ்வுக்கு இழுத்து வந்ததை அனைவரும் அறிவோம்.

முதல்வரே...

வடமாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக பொது வேட்பாளராக உங்களை நிறுத்துவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எவ்வாறான எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும், கண்டனங்களையும் எதிர்கொண்டது என்பதை தாங்களும் அறிவீர்கள். கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திடீர் தலைவர் என்று ஒரு சாரார் ஏளனம் செய்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருந்தார்கள். தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர். தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதற்கு தென்னிலங்கை சக்திகளுக்கு துணைபோகக்கூடியவர் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தபோதிலும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் அறிமுகத்தை மதித்து தங்களுக்கு வெற்றி தந்தார்கள். ஆனால் ஏமாற்றம் தரும் வகையில் தாங்கள் தங்களை ஒரு தமிழ்த்தேசிய பிதாவாகவும் ஒப்புவமை இல்லாத தேசியத்தலைவரின் இடத்தை பிரதியீடு செய்ய எத்தனிப்பது போன்றும் தங்களது அண்மைக்கால நடவடிக்கைகள் அமைகின்றன. தாங்கள் ஒரு சாதாரண [illegible] சுயநலம் கொண்ட அரசியல்வாதியாக மாறயிருப்பதையே தங்கள் பேச்சுக்களும் அறிக்கைளும் காண்பிக்கின்றன.

அரசியலுக்கு புதியவராக இருந்த போதிலும் தங்கள் புத்திசாலித்தனம் மேலும் கூர்மையாக்கப்பட்டு புதிய நகர்வுகளை மேற்கொள்ள முற்படுவதையும் சக உறுப்பினரான சுமந்திரனுக்கு பதிலாக தாங்கள் வெளியிட்ட அறிக்கையும் தொடர்ந்து நீங்கள் நிகழ்த்தும் உரைகளும் வெளியிடும் கருத்துக்களும் காண்பிக்கின்றன. உங்களை அரசியலுக்கு இழுத்து வந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு மட்டுமன்றி உங்களை நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி எமது நெருக்கடிக்கு தீர்வுகாண முன்வரும் பலம் வாய்ந்த நாடுகளையும் ஏமாற்றும் வகையில் உங்களால் சாதூரியமாக நடந்துகொள்ள முடியும் என்பதையே அண்மையில் உங்களை சந்தித்த இந்திய அமெரிக்க ராஜதந்திரிகளுக்கு தாங்கள் தெரிவித்த கருத்துக்கள் நிரூபிக்கின்றன. தங்கள் தலைமையில் புதிய கூட்டமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு தடங்களில் நகர்வுகள் மேற்கொண்ட தாங்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எதிராக அல்லது மாற்றாக புதியதொரு அணியை ஏற்படுத்தி அதற்கு தலைமைத்துவத்தை வழங்கவும் தயாராகி உள்ள நிலையில் கட்சியின் உள் முரண்பாடுகள் பேசித்தீர்க்கப்படும் என்று வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு வாக்குறுதி வழங்கி இருக்கிறீர்கள்.

இதற்கு அமைவாக தங்களது அடுத்த நகர்வை வெளியிட முடியுமா? தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் வடமாகாண முதலமைச்சராகத் தங்களைத் தேர்ந்தெடுத்திருப்பினும் அவர்களின் தேர்தல் களங்களில் அந்த அமைப்புக்கு ஆதரவாக இயங்குவதை மறுத்ததோடு கூட்டமைப்பு தலைமை தன்னிச்சையாக இயங்குவதாக பகிரங்கமாக குற்றஞ்சாட்டிய தாங்கள் அவர்களுடன் இதய சுத்தியாக பேசி கூட்டமைப்பின் ஒருமைப்பாட்டை தக்கவைக்க உதவுவீர்கள் என்பதை எவ்வாறு நம்பமுடியும். ஏனெனில் அண்மைக்காலமாக தாங்கள் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் கூட்டமைப்பின் தலைமையை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் முதலமைச்சர் பதவியை அடைவதற்காக மட்டுமே கூட்டமைப்பு தலைமையை அனுசரித்து நடந்துகொண்டதாகவே பலர் கருதுகிறார்கள்.

தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தியும் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களே எமது மண்ணைக்கா[illegible] மக்களுக்குமாக இன்றைய [illegible] தேவையாக இருக்கின்றார்கள் என்றும் தற்போது கூறும் தாங்கள் [illegible] நாடாளுமன்ற உறுப்பினர்[illegible] வாய்க்காலிலும் வட்டுக்கோட்டை[illegible]யும் பதவிப்பிரமாணம் செய்திருந்த வேளையில் தாங்கள் அலரி மாளிகையில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டீர்கள். வடக்குமாகாணசபையை இயக்க வேண்டிய பொறுப்பு தங்களுடையது என்றும் தென்னிலங்கை தலைமையுடன் நிர்வாக ரீதியாக மோதி வட மாகாண சபை மூலமாக தமிழ் மக்களுக்கு சேவையாற்ற இந்த அணுகுமுறை அவசியம் போலும் என்று நம்பியிருந்த மக்களுக்கு எஞ்சியது வெறும் ஏமாற்றமே. வட மாகாணசபையை உரிய முறையில் இயக்குவதற்கு தாங்கள் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை. வட மாகாண சபை அதிகாரமற்ற மாகாண சபை என்றும் அரசாங்கம் அதற்கான [illegible]மையாகத் தரவில்லை என்பதும் தங்கள் தரப்பிலிருந்து வெளி வரும் காரணம். அதிகாரமற்ற ஒரு அமைப்பை எதற்காகப் பொறுப்பேற்க வேண்டும் என்று தங்கள் பின்னால் தற்போது செயற்படும் கஜேந்திரகுமார் அப்போதே கேட்டிருந்தார். எனினும் வட மாகாணசபையின் அதிகாரங்களை மற்றவர்களை விட அதிகம் தெரிந்திருந்த தாங்கள் தங்கள் சாணக்கியத்தாலும் சட்ட நுணுக்கங்களை பயன்படுத்துவதாலும் அரசுக்கு பாரிய சட்ட நிர்வாக நெருக்கடியையும், அழுத்தங்களையும் கொடுத்து அதிகாரங்களைப் பறித்தெடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடுமே தமிழ் மக்களால் முதல்வராக நியமிக்கப்பட்டீர்கள். ஆனால் தங்களது மகத்தான நேரமும், அனுபவமும், ஆற்றலும் தங்களை அரசியலுக்கு இழுத்துவந்த தமிழ் மக்களின் அரசியல் பலத்தை சீர்குலைப்பதிலும் அதன் மற்றொரு இளந்தலைவரை அப்புறப்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதிலுமே செலவிடப்படுவதை நாம் வேதனையுடன் அவதானிக்கிறோம்.

வடக்கு மாகாண சபையானது ஏற்கனவே கொண்டிருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தி செய்யவேண்டிய அவசியப் பணிகளைக்கூட தகுந்த முறையில் முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை தங்கள் தரப்பிலிருந்து எந்த பதிலும் இல்லை. ஒற்றையாட்சிக்குட்பட்ட மாகாண சபையின் அனைத்து சலுகைகளையும் முதல்வராக அனுபவித்து வரும் தாங்கள் அதனை சரிவர நிர்வகிக்காது மக்களை வசப்படுத்தும் வகையில் அதிதீவிர அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பாராக காண்பிப்பதும், முரண்பாடான கருத்துக்களைத் தெரிவிப்பதும் கவலைக்குரியது.

வடக்கு மாகாணசபையின் முதல்வராக தங்களை தெரிவுசெய்தால் நீதியரசர் என்ற நாட்டின் உயர் பதவிநிலையை வகித்த பெருமையோடு தென்னிலங்கை தலைவர்களுடன் நெருக்கமான உறவையும் கொண்டிருக்கும் தாங்கள் தங்களது திறமையினால் மத்திய அரசுப்பொறிமுறையோ[illegible] மோதி பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார் என்று எதிர்பார்த்த கூட்டமைப்பையும், தமிழ் மக்களையும் கைவிட்டுவிட்டு புதிய இலக்கொன்றில் பயணிக்க தலைப்படுகிறீர்கள் என்று கூறுவதில் தவறில்லை என்றே கருதுகிறோம். வடக்குக்கு பயணிக்கும் சர்வதேச தலைவர்கள். பிரதிநிதிகள் ஆகியோரோடு சந்திப்புகளை தொடர்ந்து மேற்கொள்ளும் தாங்கள் அதனைப் பயன்படுத்தி மக்களுக்கான உதவிகளை பெறுவதற்கு முயற்சித்ததாக இல்லை.

மாறாக தமிழ் மக்களின் ஒற்றுமையை குலைத்துவிடாதீர்கள் என்று இந்திய அமெரிக்க பிரதிநிதிகள் தங்களிடம் கோரிக்கை முன்வைக்கும் வகையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள். போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியான வன்னி மண்ணின் அவலத்தை உணர்ந்து அதற்கான புதிய அபிவிருத்தித் திட்டங்களையும் ஒதுக்கீடுகளை மேற்கொண்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தாங்கள் இது விடயத்தில் செயலற்று இருப்பதையே அவதானிக்கிறோம். வன்னியின் மீள் கட்டுமான நடவடிக்கைகளுக்காக வடமாகாண சபையின் முழு அமைச்சுக்களின் பலத்தையும் பயன்படுத்துவதோடு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முதல்வராகிய தாங்கள் அறிக்கை, போரை நடத்துவதற்கே முன்னுரிமை வழங்குகிறீர்கள் என்றே கருதமுடிகிறது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டொனமூர் அரசியல் திட்டமும், பயனற்றுப் போன தமிழர் வரலாறும்

கடந்த வாரத்தொடர்ச்சி...

பிரித்தானியாவில் காணப்படுவதைப் போன்று மந்திரி சபை ஆட்சிமுறையினையோ, ஐக்கிய அமெரிக்காவில் காணப்படுவதைப் போன்று ஜனாதிபதி ஆட்சி முறையினையோ ஏற்படுத்தாது நிர்வாக விடயங்களை மேற்கொள்வதற்காகநிர்வாகக்குழு ஆட்சி முறையினை ஏற்படுத்தியமைக்கான காரணிகளாக பின்வரும் விடயங்கள் அமையப்பெறுகின்றன.

1833 ஆண்டில் அறிமுகமான கோல்புறூக் அரசியல் திட்டம் முதல் மனிங் டிவன்சயர் அரசியல் திட்டம் வரையிலான அரசியல் திட்டங்களினூடாக இலங்கை பிரதானிகளுக்குசட்டவாக்கத்தில்மட்டுமே பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிட்டியது. நிர்வாகத்தில் பங்கேற்பதற்கான எந்த ஒரு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. டொனமூர் குழு முன்னிலையில் சாட்சியமளித்த இலங்கை பிரதானிகள், தாம் நிர்வாகத்திலும் பங்குகொள்ள வேண்டுமென கருத்துத்தெரிவித்தனர். இலங்கையரின் அத்தகைய கோரிக்கையை நிறைவேற்றும் முகமாக நிர்வாகக் குழு ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை பிரதானிகள் நீண்ட காலமாகவே சட்டங்களை ஆக்குபவர்களே அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். அரசாங்க சபையில் அங்கம் வகிக்கும் அனைவரையும் நிர்வாகத்தில் பங்குபெறச் செய்வதன் ஊடாக இலங்கைப் பிரதானிகளின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றிவைக்கலாமெனக் கருதி நிர்வாகக் குழு ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த காலப்பகுதியில் இலங்கையில் எவ்விதமான அரசியல் கட்சிகளும் காணப்படவில்லை. அத்துடன் இலங்கை மக்கள் பல்வேறு இன, மத பிரதேச வேறுபாடுகளின் அடிப்படையில் பிரிந்து தொழிற்பட்டமையினால் எதிர்காலத்தில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெறக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படவில்லை. எனவே கட்சிகளற்ற சூழ்நிலைக்கு பொருத்தமான வகையில் நிர்வாகக்குழு ஆட்சி முறையை ஏற்படுத்தினார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் காணப்படுவதனைப்போன்று நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை ஏற்படுத்தவேண்டுமாயின் நிர்வாகத்தில் நன்கு தேர்ச்சிபெற்ற தலைவர்கள் இருத்தல் வேண்டும். அத்தகைய தலைவர்கள் இலங்கையில் இல்லாத காரணத்தினால் நாட்டின் நிர்வாக அதிகாரங்களை தனி ஒரு நபரிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. எனவே ஒரு குழுவிடம் ஒப்படைக்கும் முகமாக நிர்வாக குழு ஆட்சி முறையை ஏற்படுத்தினார்கள்.

1833ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் திட்டம் முதல் ஏற்படுத்தப்பட்ட அனைத்து சீர்திருத்தங்களிலும் வழங்கப்பட்ட சகல விதமான உரிமைகளையும், சலுகைகளையும் இலங்கை வாழ் பெரும்பான்மையின மக்களே அனுபவித்து வரலாயினர். இதனை டொனமூர் குழு முன்னிலையில் சாட்சியமளித்த சிறுபான்மை இன மக்கள் தாமும் நிர்வாகத்தில் பங்குபெற வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனக் கோரினர். எனவே சிறுபான்மையின மக்களின் நன்மை கருதி நிர்வாகக் குழு ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது.

பிரித்தானியாவில் மத்திய அரசியல் விடயங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்களை மந்திரி சபையிடம் மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் மந்திரி சபையிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் உள்ளூராட்சி அமைப்புக்களில் நிர்வாக அதிகாரங்கள் நிர்வாகக் குழுக்களிடமே ஒப்படைக்கப்பட்டு இருந்தன. அங்கு அவற்றின் செயற்பாடுகள் சிறப்பான முறையில் அமையப்பெற்றிருந்தது. அத்தகைய ஒரு தன்மையினை இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாமென கருதி நிர்வாக ஆட்சி முறையை ஏற்படுத்தினார்கள்.

**நன்மைகள்**

1833ஆம் ஆண்டு முதல் இது வரைக் காலமும் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்த்திருத்தங்களின் ஊடாக இலங்கை பிரதானிகளுக்கு சட்டவாக்கத்தில் மட்டுமே பங்கேற்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. நிர்வாகக் குழு முறையினூடாக சட்டவாக்கத்தில் மட்டும் பங்கெடுத்த இலங்கைத் தலைவர்களுக்கு நிர்வாகத்திலும் பங்கேற்பதற்கான வாய்ப்புக் கிட்டியது.

இலங்கை பிரதானிகளின் நீண்ட கால கோரிக்கையான சட்டங்களை ஆக்குபவர்களே அதனை நடைமுறைப்படுத்தவேண்டும். என்ற கோரிக்கை நிர்வாகக் குழு ஆட்சியினூடாக நிறைவேறியது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபை ஆட்சிக்கு தேவையான அனுபவத்தினையும், பயிற்சியினையும் இலங்கை பிரதானிகள் பெற்றுக்கொண்டனர்.

இதுவரை காலமும் இலங்கை பிரதானிகள் நிர்வாக விடயத்தில் பயிற்சியற்றே காணப்பட்டனர். அத்தகையவருக்கு நிர்வாக குழு முறையானது சிறந்த பயிற்சிக் களமாக இருந்தது.

இதுவரை காலமும் இலங்கை பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்த்திருத்தங்களினூடாக சகல உரிமைகளையும், சலுகைகளையும் பெரும்பான்மை இன மக்களே அனுபவித்தனர். நிர்வாகக் குழு ஆட்சியினூடாக சிறுபான்மையினரும் நிர்வாக விடயங்களில் பங்கேற்று, அரசியல் உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதற்கு முன்னுள்ள அரசியல் திட்டங்களில் நிர்வாகம் தொடர்பாக எடுக்கப்படும்தீர்மானம்தனிநபர்ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே சிறந்த தீர்மானம் எடுப்பதற்கான வாய்ப்புக் குறைவாக இருந்தது. ஆனால் நிர்வாகக் குழு முறையினூடாக ஒரு தீர்மானம் பல வாத பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு எடுக்கப்பட்டமையினால் சிறந்த தீர்மானம் எடுக்கப்படுவதற்கு வழி சமைத்தது.

நிர்வாகக் குழு ஆட்சி முறையின் ஊடாக இலங்கை தலைவர்கள் சிறந்த நிர்வாக பயிற்சிகளைப் பெற்றனர். பிற்காலத்தில் இவர்கள் இலங்கையின் நிர்வாகத்தை தனித்து செயற்படுத்துவதற்கான பயிற்சிகளைப் பெற்றனர்.

**இலங்கை நிர்வாகக் குழுவின் விவசாய துறைக்கு தலைமை தாங்கிய D.S சேனாநாயக்க பிரதமராகத் தெரிவானார்.**
**உள்ளூராட்சிக்கு பொறுப்பாக இருந்த S.W.R.D பண்டாரநாயக்க பிற்காலத்தில் மற்றுமொரு பிரதமராகத் தெரிவானார்.**

நிர்வாகக்குழு ஆட்சியினூடாக இலங்கையில் பல அபிவிருத்தி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**194 ஆம் ஆண்டு இலவசக் கல்வி அறிமுகம். இலங்கையின் முதலாவது பல்நோக்கு அபிவிருத்தி திட்டமான கல்லோயா அபிவிருத்தி திட்டம் ஏற்படுத்தப்பட்டமை.**

நிர்வாகக்குழு ஆட்சியினூடாக தெரிவான ஒவ்வொரு தலைவர்களுக்கும் மந்திரிமார்கள் என்ற அந்தஸ்து கிடைக்கப்பெற்றது.

**குறைபாடுகள்**

நிர்வாகக்குழு ஆட்சியின் ஊடாக இலங்கைத் தலைவர்களுக்கு பத்தில் ஏழு வகையான அதிகாரங்கள் வழங்கப்பட்ட போதும் எஞ்சிய மூன்று பிரதான அதிகாரங்களும் பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட காரியதரிசிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தமையினால் இலங்கை பிரதானிகளால் அவர்களை மீறி எதனையும் செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

இதுவரை காலமும் தனி ஒரு நபரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக விடயங்களை இங்கு குழு மட்டத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டமையினால் வீணான கால தாமதம் ஏற்பட நிர்வாகக்குழு ஆட்சி வழி சமைத்தது.

ஒரு விடயமானது முதலில் நிர்வாகக் குழு மட்டத்திலும் தொடர்ந்து அமைச்சரவையிடமும் அதனைத் தொடர்ந்து அரசாங்க சபையிடமும் பின்னர் சட்ட காரியதரிசியிடமும் பின் தேசாதிபதியின் இறுதி கையொப்பமும் பெற்று நிறைவேற்றப்படல் வேண்டும் இவ்வாறு பல படிமுறை கடக்க வேண்டியதால் வீணான கால தாமதம் ஏற்பட்டது.

நிர்வாகக் குழு, அமைச்சரவை, அரசாங்க சபை, சட்ட காரியதரிசி, தேசாதிபதி, நிர்வாகக் குழு (நடைமுறைப்படுத்த)

நிர்வாகக்குழு ஆட்சியின் ஊடாக சிறுபான்மை இன மக்களின் நலன் பேணி பாதுகாக்கப்படும் எனக் கருதப்பட்டது. ஆனால் அரசாங்க சபையில் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்தமையினால் சிறுபான்மை இன மக்கள் உரிமைகளையும், சலுகைகளையும் பெறமுடியாது போனது.

நிர்வாகக்குழு ஆட்சியின் ஊடாக இலங்கைப் பிரதானிகள் கூட்டுப்பொறுப்பு இன்மை என்ற விடயத்தை கற்றுக் கொள்ளலாயினர். கூட்டுப்பொறுப்பு எனப்படுவது "ஒரு குழு செய்த செய்யாது விட்ட விடயங்கள் மீது கூட்டாகப் பொறுப்பேற்கின்ற தன்மை ஆகும்" இத்தகைய கூட்டுப் பொறுப்பு நிர்வாகக் குழு முறையில் காணப்படவில்லை. எனவே தான் D.S.சேனாநாயக்க என்பவர் "நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கு கூட்டுப்பொறுப்பு என்றால் என்ன என்பது பற்றி சுற்றுநிருபங்களின் ஊடாக அறிவிக்க வேண்டும்" என்றார். இது தொடர்பாக ஜோன் கொத்தலாவல கருத்து தெரிவிக்கையில் "நாம் பூட்டிய அறையில் இருந்து நிர்வாகத் தீர்மானங்களை எடுப்பதைவிட காலி முகத்திடலில் இருந்து எடுப்பது சிறந்தது." என்றார்.

நிர்வாகக் குழு ஆட்சி முறையானது கட்சிகள் அற்ற சூழ்நிலைக்கு பொருத்தமான முறையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். எனவே இது எதிர்காலத்திலும் இலங்கையில் அரசியல் கட்சிகள் உருவாவதை கட்டுப்படுத்துவதாக இருந்தது.

நிர்வாகக்குழு ஆட்சிமுறையினூடாக இலங்கையில் ஏற்றத்தாழ்வான அபிவிருத்தி ஏற்பட வழி சமைத்தது. சிறந்த ஆளுமை மிக்க தலைவர்களை உடைய நிர்வாகக்குழுக்கள் துரிதமாக அபிவிருத்தி அடைய ஏனைய குழுக்கள் அபிவிருத்தி குன்றிய நிலையில் காணப்பட்டன.

நிர்வாகக்குழு ஆட்சிமுறையினூடாக அரசியல் சகாயம் ஏற்படலாயிற்று. இது வரைக்காலமும் இலங்கையில் அரசியல் பதவிகள் தகுதி, திறமை என்பவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டன. நிர்வாகக் குழு முறையின் ஊடாக வேட்பாளர்கள் தமது தொகுதியில் செல்வாக்கை பெருக்கிக்கொள்ள தகுதி, திறமை அற்றவர்களுக்கும் நிர்வாக பதவிகளை வழங்கலாயினர்.

நிர்வாகக் குழு ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் ஒருவர் தலைமை தாங்காமை அதன் செயற்றிறனை குறைக்கலாயிற்று.

இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு பொறுப்புச்சொல்ல வேண்டியவர்களுக்கு குறைந்த அளவிலான அதிகாரமும் மக்களால் , தெரிவு செய்யப்பட்டது. மக்களுக்கு பொறுப்புச் சொல்லத் தேவை அற்றவர்களுக்கு கூடிய அளவான அதிகாரமும் வழங்கப்பட்டமை ஜனநாயகத்துக்கு முரணான அம்சமாகும்.

நிர்வாக் விடயங்கள் ஏழு குழுக்களிடம் வழங்கப்பட்டமையினால் செலவு கூடிய ஆட்சிமுறையாகக் காணப்பட்டது.

**அமைச்சரவை அல்லது மந்திரி சபை**

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாதிரி அம்சமே அமைச்சரவை ஆகும். இலங்கையின் நிர்வாக அதிகாரங்கள் நிர்வாக குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நிர்வாக குழுக்களுக்கு ஒத்தாசை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அம்சமே அமைச்சரவை ஆகும்.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கையின் நிர்வாக அதிகாரங்கள் பத்தாக வகைப்படுத்தி அதில் ஏழு வகையான அதிகாரங்களை பத்தாக வகைப்படுத்தி அதில் ஏழு வகையான அதிகாரங்களை இலங்கையருக்கும் எஞ்சிய மூன்று அதிகாரங்கள் பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட காரியதரிசிகளுக்கும் ஒப்படைக்கப்பட்டன. ஏழு நிர்வாக குழுக்களின் தலைவர்களும் மூன்று காரியதரிசிகளுமாக இணைந்து ஏற்படுத்தப்பட்ட அமைப்பு "அமைச்சரவை" ஆகும். இதன் தலைவராக பிரதம காரியதரிசி இருக்க ஏனையோர்களுள் ஒருவர் உபதலைவராக இருந்தார்.

அமைச்சரவையை கூட்டுவதற்கு கூட நடப்பெண் 06 ஆகும். இதில் கட்டாயமாக மூன்று காரியதரிசிகள் பிரசன்னமாகி இருத்தல் வேண்டும். அமைச்சரவை கூடுகின்றபோது ஏதேனும் அமைச்சர் தேவைப்பட்டால் அவரை அழைப்பித்து எடுக்கக்கூடிய அதிகாரம் அமைச்சரவைக்கு உண்டு.

ஏழு நிர்வாக குழுக்களுக்கும் ஆலோசனை வழங்கி அவற்றை ஒருங்கிணைப்பது மந்திரி சபையின் பிரதான கடமையாகும்.

அத்துடன் வருடாந்த வரவு செலவு திட்டத்தைதயாரித்தல் அமைச்சரவையின் மற்றொரு கடமையாகும் (தயாரிக்கும் போது நிர்வாகக்குழுவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளலாம்)

நிர்வாகக் குழுக்களில் இடம்பெறும் வாக்கெடுப்புக்களில் அமைச்சருக்கு சாதாரண நிலையில் வாக்களிக்கும் உரிமை இல்லை. ஒரு விடயம் சமநிலையை பெறும் போது தமது வாக்கினை அளித்து குறித்த விடயத்தை நிறைவு செய்து வைக்கலாம்.

அமைச்சரவையினால் தயாரிக்கப்படுகின்ற வருடாந்த வரவு, செலவு திட்டம் தோல்வியடைந்தால் அமைச்சரவை கலைக்கப்படவேண்டும். அமைச்சரவை கலைக்கப்பட்டு புதியதோர் அமைச்சரவை உருவாக்கப்படும். அவ் அமைச்சரவையில் மீண்டும் ஒரு வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படும். அவ் வரவு, செலவு திட்டமும் நிராகரிக்கப்பட்டால் அரசாங்க சபை கலைக்கப்பட்டு அடுத்த தேர்தலுக்கான திகதி குறிக்கப்படும்.

இவ்வாறு யாப்பில் ஏற்பாடுகள் இருந்தாலும் நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை.

**உதாரணம்:-**

1834 ஆம் ஆண்டில் சம்பள நிர்ணய சபையினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்று அரசாங்க சபையில் நிராகரிக்கப்பட்ட போதும் அமைச்சரவை கலைக்கப்படவில்லை.

1940 ஆம் ஆண்டு கைத்தொழில் தொடர்பான ஒரு பிரேரணை தோல்வி அடைந்தபோதும் அமைச்சரவை பதவி விலகவில்லை.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையில் காரியதரிசிகள் அமைச்சரவைக்குள் ஒரு அமைச்சரவையாக தொழிற்பட்டு வந்தனர். இது தொடர்பாக Q.C கொரியா என்பவர் கருத்து தெரிவிக்கையில் "மந்திரி சபையின் போக்கு மந்திரி சபைக்குள் இன்னொரு மந்திரி சபையை ஏற்படுத்தி உள்ளது" எனக் குறிப்பிட்டார்.

இங்கு ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையானது "கூட்டுப்பொறுப்பு" என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்படவில்லை.

**தொடரும்...**

**தளபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்

## 11 மாதங்களில் 67 கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்

கடந்த 11 மாத காலப்பகுதியில் 67 சிறைக்கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர். இவர்களில் 23பேர் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இந்த விடயம் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் தப்பிச்சென்றவர்களில் இன்னும் கைதுசெய்யப்படாமல் இருப்போர் தொடர்பில் உரிய முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு 2013ம் ஆண்டில் 12 கையடக்க தொலைபேசிகள் வழங்கியதாக கூறப்பட்ட சிறைக்காவலர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.





## தொலைபேசி விபரங்கள் டயலொக் நிறுவனத்தினால் சட்டமாதிணைக் களத்திடம் கையளிப்பு

ரக்பிவீரர்வஸிம்தாஜுதீன்மரணம்தொடர்பான தொலைபேசி உரையாடல் விபரங்களை டயலொக் எக்ஸியாடா நிறுவனம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது. முன்னதாக இந்த தகவல்களை வழங்குவதற்கு டயலொக் நிறுவனம் மறுப்பு தெரிவித்து வந்தது. இதனையடுத்து அந்த நிறுவனம் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

எனினும் இறுதியாக கடந்த வாரத்தில் இந்த விபரங்களை டயலொக் நிறுவனம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளது. இதனையடுத்து டயலொக் நிறுவனத்துக்கு தமது நன்றியை தெரிவித்துள்ள சட்டமா அதிபர் திணைக்களம், இந்தத் தரவுகளை வைத்துக் கொண்டு தாஜுதீனின் மரணம் தொடர்பான விசாரணையை விரைவுப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.



## மன்னார் – வங்காலை மக்களை அச்சத்திற்குள்ளாக்கும் யானைகள்

மன்னார்-நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வங்காலை கிராமத்தில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர். வங்காலை கிராமம் மன்னார் மாவட்டத்தில் கடல்வளத்தினையும், விவசாயத்தையும் தொழிலாகக்கொண்ட கிராம மாகும். இக்கிராமத்திற்குள் கடந்த காலத்தில் யானைகள் வந்ததாக எதுவித தகவல்களும் இல்லை. ஆனால் கடந்த இரு வாரங்களாக வங்காலையின் கடற்கரையை அண்டிய பகுதியில் காணப்படும் கண்ணாப் பற்றைகள் உள்ள பகுதி ஊடாக இரவு வேளைகளில் யானைகள் வருவதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

குறித்த யானைகள் இரவு வேளைக ளில் கண்ணாப்பற்றை பகுதியில் இருந்து கூட்டமாக வந்து கடற்கரையை அண்டிய பகுதி யில் நடமாடித் திரிவதாக தெரிவிக்கும் மக்கள் இவற்றின் வருகையால் அச்சத்தில் உள்ளனர். எனினும் இவ்வாறு இரவில் வரும் யானைக ளினால் இது வரையில் குறித்த கிராமத்திற்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றாலும் யானைகள் இங்கு வருவது முதற்தடவை என்பதால் மக்கள் இரவு வேளை களில் அச்ச உணர்வோடு நடமாடவேண்டிய நிலைகாணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் கடற்கரையை அண்டிய பகுதியில் யானைகளின் கழிவு மற்றும் கால் தடயங்கள் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.



## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மன்னாரில் ஊர்வலம்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை யொட்டி மன்னார் மாவட்டச் செயலகமும், மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு பேரணி காலை மன்னாரில் இடம் பெற்றது. மன்னார் பிரதான பாலத்திற்கு முன்பாக காலை 10 மணியளவில் ஆரம்பமான குறித்த பேரணி மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தை சென்றடைந்தது. பின் அங்கு மக்கள் மத்தியில் மாற்றாற்றல் கொண்டவர்கள் தொடர்பாகவும் அவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்திற்கு வருகை தந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி. மேல், மன்னார் பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் ஆகியோர் விழிப்புனர்வை ஆரம்பித்து வைத்ததோடு அரச பேருந்து தரிப்பிடத்தில் நின்ற அரச பேருந்துகளில் மாற்றாற்றல் கொண்டோர் தொடர்பான தகவல் பிரசுரிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டது. இதனைத்தொடர்ந்து விழிப்புணர்வு ஊர்வலம் மன்னார் நகர சபை மண்டபத்தை சென்றடைந்தது. அங்கு மாற்றாற்றல் கொண்ட இளைஞர், யுவதிகளி னால் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




## போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் உதவியை நாடும் யாழ்.பொலிஸார்

யாழ்.குடாநாட்டில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டமாக, யாழ்.மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரும் துண்டு பிரசுரங்களை பொலிஸார் ஒட்டியுள்ளனர். குடாநாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருக்கும் நிலையில் பொலி ஸார் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்தும் வகையில் ஹெரோயின் மற்றும் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்த உதவுமாறு பொலிஸாரின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தொலைபேசி இலக்கமும் போடப்பட்டுள்ளது.



## மன்னாரில் போதைப்பொருளுடன் இருவர் கைது. ஒருவர் தப்பியோட்டம்

அபாயகரமான போதைப் பொரு ளுடன் மன்னாரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தப்பியோடிவிட்டதாகவும் மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மதியம் மன்னார் தலைமையக பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பேசாலை - மன்னார் பிரதான வீதியில் பயணித்த முச்சக்கர வண்டியில் இருந்து குறித்த அபாயகரமான போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. 191 கிராம் 51 மில்லி கிராம் எடை கொண்ட குறித்த போதைப்பொருள் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரியவருகின்றது.

பேசாலையில் இருந்து மன்னார் நோக்கி மதியம் முச்சக்கர வண்டியில் 3 பேர் பயணித்தபோது மன்னார் தலை மையக பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலி ஸார் குறித்த முச்சக்கர வண்டியை நிறுத்தி சோதனையிட முற்பட்டபோ[illegible] அதில் பயணித்த மூவரில் ஒருவர் தப்பி[illegible] சென்றுள்ளார். ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த அபாயகரமான போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் குறித்த முச்சக்கர வண்டியின் சாரதி எனவும், அவர்கள் பேசாலை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் முதற்கட்ட விசார ணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## பத்து வயது சிறுமியிடம் வக்கிரமான துஷ்பிரயோகம். வாலிபருக்கு விளக்கமறியல்

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பத்து வயது சிறுமி யொருத்தியை துஷ்பிரயோகம் செய்த வாலிபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆலையடிவேம்பு, கண்ணகிபுரம் பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. குறித்த வாலிபர் சிறுமி தனியாக வீட்டில் இருக்கும் நேரம் சென்று ரீலோட் கார்ட் ஒன்றை வாங்[illegible] வருமாறு பணம் கொடுத்துள்ளார். அத[illegible] பின்னர் யாருமில்லாத தனது வீட்டுக்கு சிறுமியை வரவழைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதுகுறித்து சிறுமி தன் உறவினர்களிடம் தெரியப்படுத்தியதை அடுத்து பொலிசில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிசார் தொடர்ந்த வழக்கின் பேரில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குறித்த வாலிபர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



## மழையிலும் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினரின் பாரிய ஆர்ப்பாட்டம்

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். நல்லாட்சி அரசாங்கத்தின் 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் வரவு செலவுத்திட்டம் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன், மழைபெய்து கொண்டிருந்த நிலை யிலும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை, ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளதாகவும், பொது மக்கள் அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியதாகவும் மேலும் தெரியவருகின்றது.

உலக வெப்பமயமாதல் விளைவாக காலநிலை யில் ஏற்படும் மாற்றங்களால் குறிப்பாக யாழ்ப்பாணம் கடலால் மூழ்கும் அபாயம் உள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இவ்வாறு வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நிபுணர்களை மேற்கோள்காட்டித் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் ஐங்கரநேசன், 2004ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு கடற்கரை பகுதிகளை சுனாமி தாக்கியதால் சுமார் ஒரு மணித்தியாலத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சுனாமியால் உடமைகள், உயிர்கள் என பல அழிவடைந்தன. இந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் நாம் மீளவில்லை. எனவே 26 ஆம் திகதியை நாம் 'பேரழிவு கட்டுப்பாடு நாள்" என பிரகடனம் செய்துள்ளோம்.

இதேவேளை இலங்கையில் எதிர்காலத்தில் காலநிலையில் பல மாற்றங்கள் ஏற்படலாம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இயற்கை பேரழிவுகள் என்பது புதிதல்ல. எனினும் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களால் பூமியிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மேலும் உல கில் உள்ள எரிமலைகள் பல வெடிக்க ஆரம்பித்துள்ளன. இதனால் பூமியில் வெப்பநிலை அதிகரித்துள்ளதோடு அதிக மழை பெய்யும் நிலையும் ஏற்பட்டு வெள்ளமும் ஏற்படுகின்றது. இந்த நிலைமையே அண்மையில் சென்னையில் ஏற்பட்டிருந்தது. எனவே இயற்கை பேரழிவுகளிருந்து எம்மை பாதுகாத்துகொள்ள இயற்கைக்கு கேடு விளைவிக்காமல் இருப்பதோடு இது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிம்புவிற்கும் பீப்புக்கும் சம்மந்தமே இல்லை - அதிரடி அறிக்கை



சிம்புவின் பீப் பாடலால் தமிழகமே கொதித்து எழுந்துள்ளது. அவரின் மீது தினமும் 10 புகார்கள் வந்து குவிகின்றது. இந்நிலையில் சிம்பு தரப்பில் ஒரு மனு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 'சிம்பு ஒரு இசைப்பிரியர். நிறைய படங்களில் பாடல்கள் உருவாக்கியுள்ளார். இதனிடையில் நிறைய பாடல்களை எந்த படத்திலும் வெளியிடாமல், தனது சொந்த பயன்பாட்டிற்காக தயார் செய்து வைத்திருந்தார். இதை யாரோ ஒரு விஷமி சிம்புவின் வெளிவராத ஒரு பாடலைத் திருடி அதில் பெண்களை கொச்சை படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார்' எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், எல்லோருக்கும் நன்றாக தெரியும் சிம்பு தான் அந்த வார்த்தைகளையும் பாடியுள்ளார் என்று. தற்போது திடிரென்று இப்படி பல்டி அடிப்பது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.

## எமி ஜாக்ஸன் கூறிய சர்ச்சை கருத்து



திரைப்பிரபலங்கள் எப்போதும் எங்கும் பார்த்து தான் பேச வேண்டும் போல. அதிலும் தற்போது சமூக வலைத்தளங்களில் கூட மிகவும் கவனித்துத்தான் எந்த கருத்தையும் கூற வேண்டும். இந்நிலையில் தமிழகத்தின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை நிறுத்தவேண்டும் என்று பல திரைப்பிரபலங்கள் கூறி வருகின்றனர்.

மிருகங்களை கொடுமைப்படுத்தக்கூடாது என்று வித்யாபாலன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க, தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக வலம்வரும் எமி ஜாக்ஸனும் இதற்கு ஆதரவு அளித்தது தமிழக மக்களிடையே மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அஜித்தின் அடுத்த படத்தின் படப்பிடிப்பு எப்போது?



அஜித் தற்போது காலில் ஏற்பட்ட அறுவை சிகிச்சையால் ஓய்வில் இருக்கிறார். இந்நிலையில் தன் அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பை சிவாவிற்கு தான் வழங்கவுள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் இப்படத்தை தயாரிக்க சுரேஷ் பாலாஜி முன்வந்துள்ளதாக தெரிகின்றது.

மேலும், இப்படத்தின் படப்பிடிப்பு ஏப்ரலில் தான் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வேதாளம் படத்தில் பணியாற்றிய டெக்னிஷியன்களே இதிலும் பணியாற்றுவார்கள் என சினிமா வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

## வட இந்தியர்களை கவர்ந்து விஜய் படைத்த சாதனை



விஜய்யின் மார்க்கெட் தற்போது தமிழகம் தாண்டி மற்ற மாநிலங்களிலும் உயர்ந்துள்ளது. இந்நிலையில் விஜய்யின் பல படங்கள் ஹிந்தி டப்பிங் செய்து யுடியுபில் வெளியிடப்படுகின்றது. இந்த படங்கள் அனைத்தையும் பலரும் பார்த்து ரசிக்கின்றனர்.

இந்நிலையில் விஜய்யின் சச்சின் படம் யுடியுபில் ஒரு சாதனையை படைத்துள்ளது. இப்படம் 5 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது. இதன் மூலம் விஜய்க்கு வட இந்தியாவிலும் ரசிகர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது என்று தெரிகிறது.

## கிண்டல் செய்த ரசிகருக்கு பதிலடி கொடுத்த மாதவன்



தமிழ் சினிமாவின் என்றும் சொக்லேட் பாய் மாதவன். இவர் நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் இறுதிசுற்று படத்தின் ட்ரைலரை சிவகார்த்திகேயன் தன் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டார்.

இதற்கு ரசிகர் ஒருவர் 'நீங்கள் இந்தியா முழுவதும் அறியப்பட்ட நடிகர். நீங்கள் இப்படி ஒரு சிறிய நடிகரை வைத்து விளம்பரம் தேடக்கூடாது' என்பது போல் தெரிவித்தார். இதற்கு மாதவன் 'அவர் நடிகர் மட்டுமல்லாமல் நல்ல மனிதர். அது மட்டுமன்றி தமிழகத்தில் சிவகார்த்திகேயன் என்னை விட பெரிய நடிகர்' என பதிலடி கொடுத்தார்.

## வெளுத்து வாங்கிய ரசிகர்கள்– ஜேம்ஸ் வசந்தன் எடுத்த முடிவு



சுப்ரமணியபுரம் என்ற மாபெரும் வெற்றி படத்திற்கு இசையமைத்தவர் ஜேம்ஸ் வசந்தன். இவர் சமீபத்தில் தன் டுவிட்டர் பக்கத்தில் இளையராஜா குறித்து சில கருத்துக்களை வெளியிட்டார். இந்த கருத்துக்கள் பலவும் இளையராஜாவை தாக்குவது போலவே இருந்தது.

இதனால் ரசிகர்கள் பலரும் கோபமாகி அவரை கடுமையான வார்த்தைகளால் திட்ட தொடங்கினர். அவரும் பொறுமையாக பதில் அளிக்க ஒரு கட்டத்தில் டுவிட்டர் பக்கத்தையே நீக்கி விட்டாராம்.

## ஆர்யாவை தூக்கிவிடும் ஜீவா- நட்பிற்கு மரியாதை



ஆர்யா சமீபத்தில் நடித்த எந்த படங்களும் பெரிய அளவில் ஹிட் ஆகவில்லை. இதனால், இவரின் சினிமா பயணம் மிகவும் சோகமான பாதைக்கு செல்கிறது.

இந்நிலையில் ஜீவா தான் தயாரிக்கும் அடுத்த படத்திற்கு ஆர்யாவை தான் ஹீரோவாக கமிட் செய்துள்ளாராம். இப்படத்தை மஞ்சப்பை படத்தை இயக்கிய ராகவன் இயக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## பிரபல இயக்குனரின் இயக்கத்தில் ஜெயம் ரவி



தனி ஒருவன் படத்திற்கு பிறகு மிகவும் கவனமாக அடுத்தடுத்த படங்களை தேர்ந்தெடுத்து வருகிறார் ஜெயம் ரவி. இந்நிலையில் இவர் நடிப்பில் அடுத்து மிருதன் வரவிருக்கின்றது.

அதற்குள் அடுத்த வாரமே நீண்ட நாள் கிடப்பில் இருந்த பூலோகம் படமும் திரைக்கு வரவுள்ளது. சமீபத்தில் வந்த தகவலின்படி ரவியின் அடுத்த படத்தை சுசீந்திரன் இயக்கவுள்ளாராம். இப்படத்தை லைக்கா நிறுவனம் தயாரிப்பதாகக் கூறப்படுகின்றது.


## அர்னோல்ட் எந்திரன் –2 வில் நடிக்காதது ஏன்?



ஷங்கர் இயக்கத்தில் ரஜனி நடிக்கும் பிரமாண்ட படம் எந்திரன் 2. இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. அனைவரும் அர்னோல்ட் தான் இப்படத்தில் வில்லனாக நடிக்கின்றார் என கூறப்பட்ட நிலையில், திடிரென்று யாரும் எதிர்பார்க்காத வகையில் இதில் அக்ஷய் குமார் நடிக்கவிருக்கின்றார்.

இதுக்குறித்து தயாரிப்பாளர் தரப்பில் "ஒப்பந்த முரண்பாடுகள் இந்திய சினிமாவுக்கும் ஹொலிவுட்டுக்குமான இடைவெளியை நிரப்புவதில் இருக்கும் உண்மையான சவால் இது. உங்களின் ஆதரவுக்கு நன்றி திரு.பாட்ரிக் ஸ்வார்ஷ்நெகர்" என்று லைக்கா நிறுவனத்தின் படைப்பாற்றல் குழு தலைவர் தன் பேஸ்புக் பக்கத்தில் கூறியுள்ளார்.

## சிவாஜி சிலை வழக்கில் நீதிபதிகள் புதிய உத்தரவு



சிவாஜி சிலை அகற்றும் வழக்கு குறித்து சென்னை ஐகோர்ட்டில் விசாரணை நடந்தது. அதில் சிவாஜி சிலையை அகற்றவேண்டும் என ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் சிலையை அகற்றாததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று ஐகோர்ட்டில் தொடரப்பட்டது.

இதனையடுத்து தமிழக அரசு இன்று, ஒரு ஆண்டிற்குள் சிவாஜிக்கு மணிமண்டபம் கட்டி முடிக்கப்படும் என்றும் அதன்பின்னர் சிவாஜி சிலையை கடற்கரை சாலையில் இருந்து அகற்றி மணிமண்டபத்தில் வைக்கப்படும் என்று பதிலளித்தது. பதிலை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இந்த வழக்கின் விசாரணையை அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்துக்கு ஒத்தி வைத்துள்ளனர்.

## முருகதாஸின் அடுத்த படம் உறுதியானது - ரசிகர்கள் வருத்தம்



இந்திய சினிமாவின் முன்னணி இயக்குனர் ஆகிவிட்டார் முருகதாஸ். இவரின் இயக்கத்தில் நடித்த அனைத்து முன்னணி நடிகர்களும் வெயிட்டிங். இந்நிலையில் முருகதாஸ் அடுத்து மகேஷ் பாபுவுடன் இணையவுள்ளார். இப்படம் முடிந்த கையோடு அடுத்து விஜய் அல்லது அஜித்துடன் இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், இவரின் அடுத்து அக்ஷய் குமார் நடிக்கும் படத்தை தான் இயக்கவுள்ளாராம். இப்படத்தை லைக்கா நிறுவனம் தயாரிக்க படத்திற்கு 'க்கா' என்ற தலைப்பு வைத்துள்ளனர். இச்செய்தி தமிழ் ரசிகர்களுக்கு கொஞ்சம் வருத்தம் தான்.

சூர்யா எப்போதும் தன் ரசிகர்களை மிகவும் மதிப்பவர். இதனாலேயே இன்னும் ரசிகர்களின் மனநிலையை தெரிந்துக்கொள்ள டுவிட்டரில் இணைந்தார். தற்போது இவர் தயாரிப்பில் டிசம்பர் 24ம் திகதி பசங்க-2 படம் வெளிவரவிருக்கின்றது. இதற்காக இவர் ரசிகர்களிடம் ஒரு சில கோரிக்கைகளை வைத்துள்ளார்.

இதில் அவர் கூறுகையில் 'தயவு செய்து பசங்க-2 படம் வெளிவரும் நாளில் திரையரங்கில் போஸ்டர், பேனர் வைக்காதீர்கள். நான் பலமுறை உங்களிடமே கூறியுள்ளேன், இதையெல்லாம் நான் விரும்பியதே இல்லை. அந்த பணத்தில் சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யுங்கள்' என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் பூங்கா



## வெள்ளத்தால் வீழ்ந்து சாகிறோம்

ஒற்றையாளாய்
ஊரின் எல்லையில்
கம்பீரமாய் நின்று
ஊரைக்காக்கும்
எல்லைச்சாமி...!

ஊருலகம்
நீர் நிறைவாய் வாழ
ஒற்றைக்காலில்
தவம் கிடக்கும்
முனிவன்...!

கரும்பாசிகள்
கயல்கள்
கரு நண்டுகள்
என நீராதாரம் காக்கும்
கடவுள்...!

ஊருணி நிறைய
உழைக்கும்
விவசாயிகள் மகிழ
உயிர் நீர் காக்கும்
உத்தமன்...!

ஆபத்து காலங்களில்
இரும்பென நின்று
இடர்தனை
நீக்கும்
பெரும் கரும்பன்...!

காவிரியே ஆனாலும்
கல்லணையே ஆனாலும்
கரும் வைரமாய்
தாங்கி நிற்கும்
கம்பீரன்

காகம், குருவிகளுக்கு
மட்டுமன்றி
மானிடத்திற்கும்
நன்மை பயக்கும்
அபயன்...!

இப்படி
எத்தனை வகையில்
எடுத்துச் சொல்லினும்
உன் சிறப்புகளை
வரிகளில் அடக்கமுடியவில்லை...!

கரைகளை கவ்விப்
பிடித்த உன் கருங்கரங்களை
கருணையின்றி
வெட்டி வீழ்த்தினோம்
கண்ட துண்டமாக்கினோம்

ஆக்கிரமிப்புகளால்
உனை அடியோடு வீழ்த்தினோம்
இன்று வெள்ளத்தால்
வீழ்ந்து சாகிறோம்
பனை மரமே...!

## மூச்சுவிடாமல் முத்தமிடுகிறாயே..?

வனத்தில் விரவும்
பூந்தென்றல் போலே
வானத்தில் விரவும்
வெண்கதிர்களால் எனை
விடாமல் முத்தமிடுகிறாயே
சற்று மூச்சு விட்டுத்தான்
முத்தமிடேன்
என்று சூரியனிடம்
கொஞ்சினாள் நிலா மதி

வெப்ப நிறை
மூச்சுக்காற்றையும்
வெளிச்ச நிறை
முத்தக்காற்றையும்
விட்டுவிட்டால்
உயிர் நீத்து விடுவேன் அன்பே...
எனை விடுத்து
நீ விலகினால்
இருளைச் சுமப்பாய் அன்பே
என்றான் சூரியன்..!

உன் முத்தமும் வேண்டும்
உன் மூச்சுக்காற்றும் வேண்டும்
மூச்சு முட்ட நீ கொடுக்கும்
முத்தத்தால்
நான் மூர்ச்சையானால் பரவாயில்லை
நீ மூர்ச்சையாகி
விடக்கூடாது அன்பே...
நீ மூர்ச்சையாகி விட்டால்
என் வாழ்வே மூர்ச்சையாகி விடும்
என்றாள் நிலாமதி..!

பூமியை நீ சுற்றிக் கொண்டிருந்தாலும்
உன் மையல் எல்லாம்
என்மேல் என்பதால்தானே
தையல் உன்மேல்
கண்ணாக இருக்கிறேன்
உந்தன் கண்ணாக இருக்கிறேன்
மூர்ச்சையானாலும்
பரவாயில்லை
உனை முத்தமிடாமல் இருக்கமாட்டேன்
என்றான் சூரியன்..!

## தொலைந்து போ..?

நமக்கிடையே
நடக்கும்
அலைபேசி
உரையாடல்களில்
அதிகம் ஊடல்தான்
வெற்றி நடைபோடும்...!
அதிலும் நீ
அடிக்கடி என்னிடம்
'தொலைந்து போ' என்று
சொல்லும்போது
என்னுள் தோன்றுவது
ஒன்றே ஒன்றுதான்
'தேடுவது நீ எனில்
மீளா இடத்தில் கூட
தொலைந்துபோகத் தயார்

## அடிக்கடி கேட்கிறாய் நீ...!

'எப்போதும்
மகிழ்வுடன் இருக்கிறாயே...
அதெப்படிடா' என்று
என்னிடம் கேட்கும் போதெல்லாம்
இந்த இதழாளனின் இதழோரம்
ஒரு மெல்லிய புன்னகை கசியும்...!
அந்த கசிவில் நீ கலந்திருப்பதை
அறிந்திருந்தாலும்
என் இதழால் அறிய
வேண்டுமென்பதற்காகவே
அடிக்கடி கேட்கிறாய் நீ...!
கேள்வி கேட்பவனையே
கேள்விக்குறியாக்கிய உனக்கு
இதெல்லாம்
சொல்லியா கொடுக்கவேண்டும்..!

## உன் கண்ணீரில் இங்கு...!

என் மீதுள்ள கோபத்தில்
எனை நீ கொலையே
செய்தாலும் கூட
கொம்பேறி மூக்கனாய்
ஏற்றுக்கொள்வேனடி..!
பெருங்கோபத்திற்கு பதிலாய்
உன் மை விழிகள்
கண்ணீர் உதிர்க்கிறதென்றால்
அதை மட்டும் என்னால்
ஏற்றுக்கொள்ள
முடியவில்லையடி
உன் கண்ணீரிலிங்கு
கரைவது என் மனம் மட்டுமல்ல
என்னுயிரும்தானடி...!

## நினைவுச் சுமைகளை...

'உன் நினைவுகளை
மட்டுமே சுமக்க
எனக்கு உரிமையுண்டு'
என்று சொல்லிவிட்டு
எனது நினைவுகளை மட்டும்
எடுத்துச் செல்பவளே...
என்னையும் உன்னோடு
அழைத்துச்செல்...
இல்லையேல்
என் உயிரை எடுத்துக்
கொண்டு செல்...
நீயின்றி இங்கே நான்
சடலமாய்த் திரிவதை விட
சாம்பலாய்க் கரைவது மேல்...

**மனதில் முளைப்பதில்லை**
**மனதின் முடிவில்தான்**
**காதல் தொடங்குகிறது...!**
**மனம் ஆசைகளை உருவாக்கும்**
**கருவி மட்டுமே**
**அதையும் தாண்டி**
**உயிரில் ஊருவதுதான் காதல்...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபுலத்தில் பாலியல் தொழிலை திட்டமிட்டு அறிமுகம் செய்யும் சிங்கள அரசு



இலங்கையில் கடந்த 30 வருட காலப்பகுதியில் வடபகுதியினைச் சேர்ந்த மக்கள் பாலியல் ரீதியான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாது ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்துவந்தனர். விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இவ்வாறு பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களைச் செய்பவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இதனால் யாரும் இந்நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இதனை மீறிச் செயற்பட்டால் அதன் விளைவு பற்றி அறிந்திருந்தமையின் காரணமாக மக்கள் ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்துவந்தனர். 2009ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பாலியல் ரீதியாகவும். போதைப்பொருட்களுக்கு அடிமைகளாகவும் இன்று வடகிழக்கிலுள்ள தமிழினம் வாழ்ந்துவருவதையிட்டு கவலைகொள்ளும் அதேநேரம் சிங்கள அரசு இதனைத் திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றது. அதாவது மீண்டும் ஒரு போராட்ட நிலை இந்த நாட்டில் ஏற்படக்கூடாது. வடகிழக்கில் வாழ்கின்ற இளம் சமுதாயத்தினரை பாலியல் அடிமைகளாக்குவதன் மூலம் தாய்லாந்து. இந்தோனேசியா. பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைப் போல இலங்கையையும் மாற்றிவிட்டால் போராட்டத்தைப் பற்றி திரும்பிப்பார்க்கமாட்டார்கள் என்பதுதான் அவர்களின் நோக்கம். இதனை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாடுகளிலுள்ள பாலியல் தொழில் புரியும் பெண்கள் இங்கு அழைத்துவரப்பட்டு மசாஜ் நிலையங்கள் என்கின்ற பெயரில் பாலியல் ரீதியான தொழில்கள் இடம்பெற்றுவருகின்றது.

அண்மைக்காலமாக இந்த பாலியல் ரீதியான தொழில் இடங்கள் பொலிசாரினால் முற்றுகையிடப்பட்டு அதில் பணிபுரிந்த ஒருசிலர் கைது செய்யப்பட்டு மிருக்கின்றார்கள். இளம் வயதுடையோரை போதைப் பொருட்களுக்கு அடிமைப்படுத்துவதன் ஊடாக. அவர்கள் தாமாகவே பாலியல் ரீதியான தூண்டுதலின் மூலம் இவ்வகையான பிரதேசங்களுக்குச் சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்யத் தூண்டப்படுகின்றார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால் பாலியல் வியாபாரத்திற்காக மும்பாய் என்ற இடம் தெரிவுசெய்யப்பட்டு அங்கே கசினோ விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளதுடன் தமது நாட்டுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு திட்டமாகவே அதனை அவர்கள் உருவாக்கிவைத்துள்ளனர். தாய்லாந்தினைப் பொறுத்தவரை அந்த நாடு பாலியல் ரீதியான தொழில்களிலேயே தங்கியுள்ளது. அந்நாட்டின் பிரதான வருமானம் இத்தொழிலே. அரபு இராச்சியங்களைத் தவிர பெரும்பாலான மேற்கத்தேய நாடுகளில் இந்த நடவடிக்கைகள் சாதாரணமான தொழிலாக நடைபெற்று வருகின்றது. ஐரோப்பிய நாடுகளைப்பொறுத்தவரை பாடசாலை மாணவ. மாணவிகள் கூட கட்டாயமாக பாதுகாப்பான உறவினைப் பேணுவதற்காக பாலியல் ரீதியான அங்கிகளைக்கொண்டுசெல்ல வேண்டும் என்பது பெற்றோர்களாலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது நடைமுறையிலுள்ளது. மேற்கத்தேய நாடுகளின் கலாசாரம் வேறு. எமது கலாசாரம் வேறு. எனவே மேற்கத்தேய நாடுகளின் கலாசாரத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் மீண்டும் யுத்தம் ஏற்படாவண்ணம் தடுக்கமுடியும் என்பதேயாகும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை அங்கு இன்று சாதாரணமாக விபச்சார விடுதிகள். மசாஜ் நிலையங்கள் என வெளிப்படையாக இயங்கிவருகின்றன. ஒரு காலத்தில் வடபுலத்தில் எய்ட்ஸ் என்ற நோய் இல்லாமல் இருந்தது. ஆனால் தற்போது இங்கு சிலருக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. போராட்ட ரீதியாக தமிழினத்தை வென்றுவிட்டோம் எனக்கூறிவருகிறது அரசு. வலுக்கட்டாயமாக மறைமுகமாக இராணுவம் மற்றும் பொலிசாரினால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு பெண்கள் உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை 1040 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 916 முறைப்பாடுகளும், பொலிஸாருக்கு 124 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2010ல் 127. 2011ல் 165. 2012ல் 17. 2013ல் 340. 2014ல் 267 முறைப்பாடுகள் என மொத்தமாக 916 முறைப்பாடுகளும். பொலிஸாருக்கு 2010ல் 17. 2011ல் 11. 2012ல் 18. 2013ல் 46, 2014இல் 32 என மொத்தமாக 124 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதேவேளை. 2010முதல் 2014வரை 370 பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என தேசிய மகளிர் குழுவுக்கும். பொலிஸூக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளில் தேசிய மகளிர் குழுவுக்கு 345 முறைப்பாடுகளும், பொலிஸூக்கு 25 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேசிய மகளிர் குழுவுக்கு 2010ல் 38. 2011ல் 78. 2012ல் 93. 2013ல் 41. 2014ல் 95 என 345 முறைப்பாடுகளும் பொலிஸூக்கு 2011ல் 04. 2012ல் 04. -2013ல் 06. 2014ல் 11 என 25 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களில் குறிப்பாக வன்னியில் இருக்கும் விதவைப்பெண்கள், வறுமைக்கோட்டின் கீழ்வாழும் பெண்கள் இராணுவத்தினரால் உள்வாங்கப்பட்டு பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை குடும்ப வறுமையின் காரணமாக சில பெண்கள் தாமாகவே பாலியல் ரீதியான தொழில்களின் மூலம் பணம் சம்பாதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.


அத்தோடு யுத்த காலப்பகுதியில் ஏராளமான பெண்கள் சிங்கள அரச படைகளினால் பாலியல் ரீதியாக திட்டமிட்டே துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கின்றமை உரிய ஆதாரங்களின் மூலம் நிரூபணமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அப்போது இவ்வாறான சம்பவங்கள் வட . பகுதியில் பரவலாக இடம்பெற்றிருக்கின்றது. தமிழ் சமுதாயத்தை அவ்வாறானதொரு சூழ்நிலைக்கு மாற்றியிருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த பல பெண் போராளிகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட சம்பவங்களும் மனதை உருக்கும் காட்சிகளாகப் பதிவாகியுள்ளன. இன்று வடபகுதியிலுள்ளவர்கள் அண்மைய காலங்களாக கலாசார ரீதியாக மாற்றம் கண்டு வருகின்றனர். மேற்கத்தேய ஆடைகளை அணிவதன் ஊடாக பாலியல் ரீதியாகத் தூண்டப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இதனால் தமிழ் மக்களுடைய கலாசார விழுமியங்கள் வெகுவாக அழிக்கப்படுகின்றது. இன்று வடகிழக்குப் பகுதியினைப் பாரக்கும்போது தமிழ் மக்களது கலாசாரம் எந்தளவில் இருக்கின்றது என்பது புலப்படுகின்றது. தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கின்றோம் என்ற நோக்கில் மறைமுகமாக இவ்வாறான சம்பவங்கள் சிங்கள அரசினால் வடகிழக்கில் திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்றது. எனினும் இதனை அறிந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கண்டும் காணாததைப்போன்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதும் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

நாளைய இளம் சமுதாயத்தினர் பாலியல் வன்முறைகளுக்குச் செல்லும் அளவிற்கு வடபகுதிச் சூழல்கள் வெகுவாக மாற்றம்பெற்றுவருவதைக் காணலாம். விடுதிகளை அமைப்பதன் ஊடாக யாழ் மாவட்டம் அழகுபடுத்தப்படுகின்றது என்று நினைக்கிறார்கள். மாறாக ஆபத்தினை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. எச்ஐவி தொற்றுக்கு உள்ளாகாமல் இருந்த வடபகுதி இன்று இத்தொற்றுக்கு உள்ளாகியிருப்பது எவ்வாறு? திட்டமிடப்பட்ட பாலியல் ரீதியான கொலைச் சம்பவங்கள். யுத்தத்தின் பின்னர் வித்தியா உட்பட 17 ஆக பதிவாகியிருககின்றது. அச்சம்பவங்கள் நடைபெற்றபோது மாத்திரமே எதிர்ப்பலைகளும் ஆர்ப்பாட்டங்களும் எழும். ஒருசில அரசியல்வாதிகள் தமது அரசியல் நலனுக்காக அதனைப் பயன்படுத்திக்கொள்வார்கள். அவ்வாறே அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டலாம்.


பாராளுமன்றத் தேர்தலை இலக்குவைத்து வித்தியாவின் படுகொலை சம்பந்தமான கருத்துக்களை தெரிவித்ததுமான செயற்பாடுகள் ஒருசிலரினால் அக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டது. இன்று வித்தியாவின் வீட்டினைச்சென்று பார்க்கும் அரசியல்வாதிகள் எத்தனைபேர் உளர். தமது சுயநலத்திற்காக அரசியலை மேற்கொண்டுவரும் இவர்கள் தமிழ் மக்களை பாலியல் அடிமைகளாக்க இவ்வாறான அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்களா? என்ற கேள்வியும் எழுகின்றது. சிங்கள அரசிற்கு அடிவருடிகளாக தமிழ் அரசியல்வாதிகளும் செயற்படுகின்றார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது. ஆரம்ப கட்டத்திலேயே இப்பாலியல் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளியினை வைக்க வேண்டும். இல்லையேல் வடகிழக்கு மாகாணங்கள் தாய்லாந்தினைப் போன்று பாலியல் தொழிலில் முன்னேற்றமடையும் பகுதிகளாகத் தள்ளப்படும். இதனை மனதிற்கொண்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும். வடமாகாணசபையும் இணைந்து அரசிற்கு அழுத்தம் கொடுத்து மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் பாலியல் தொழில் இடம்பெறும் இடங்களை இனங்கண்டு அவற்றை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இல்லையேல் வடகிழக்கில் வாழக்கூடிய தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தொற்றுநோய்களுக்குள்ளாவதுடன் அவர்களின் வாழுங்காலத்தை இழப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**நெற்றிப்பொறியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

தீண்டாமையைத் தீவிர கொள்கையாகவும் உணவு உண்பதையேதெய்வமாக கருதும் வரை நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேறமுடியாது. பெரிய புத்தகங்களை படிப்பதாலும் அவ்வாறு படித்து பேரறிஞர் ஆவதாலும் ஆன்மீக உணர்வைப்பெற முடியாது என்பது நிச்சயம்.

சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டங்கள் சேர்த்து எவரும் ஆன்மீக உணர்வைப்பெற முடியாது. அன்பின் மூலமாகத்தான் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஆன்மீக உணர்வை செலுத்தமுடியும்.

ஆன்ம ஞானத்தைப்பெற விரும்பும் ஒருவன் தொடக்கத்தில் புற உதவிகளைப் பெற்று சுயபலத்தில் நிற்கவேண்டும். ஆன்ம ஞானம் கிட்டிய பின் பிற உதவிகள் தேவையில்லை.

கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும் ஆன்மா விழித்துக்கொள்கிறது. கைக்கோ. வாளுக்கோ ஆற்றல் ஏது? ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது. எல்லாப் பெருமையையும். எல்லா ஆற்றலையும். எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர. ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

ஆன்மீக உணர்வை பெறாதவரை நமது நாடு மறுமலர்ச்சி அடையாது. ஆன்மீக வாழ்க்கையில் பேரின்பம் பெறாமல்போனால். புலனின்பவாழ்க்கையில் திருப்தியடைய முடியாது. அமுதம் கிடைக்காமல்போனால் அதற்காகச் சாக்கடை நீரை நாடிச் செல்லமுடியாது.

ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி. அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி. உன்னுள்ளே இருக்கும் ஆன்மீகம் விழிப்படையாவிட்டால். அதனால் ஒரு பயனும் இல்லை.

மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான். பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக்கொள்ள மறுப்பவன். இறந்தவனுக்கு ஒப்பாவான். காயம்படாதவன் தான் தழும்பைக் கண்டு நகைப்பான்.

உடலிலும் மனதிலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடைய முடியாது. நீ உன்னைப் பலவீனன் என்று ஒரு போதும் சொல்லாதே. எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையாக இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள்.

சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன். உனது கடந்து கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால். நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப்பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும் தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்தவையாகத்தான் இருக்கும். மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு.

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

தேர்தலை முன்னிட்டு பல இடங்களில் இலவசமாக பல பொருட்கள் வழங்கப்படுகின்றன. பல குடும்பங்களுக்கு பணம் கொடுக்கப்படுகின்றன. சிங்கள அரசின் கைக்கூலியான ஈ.பி.டி.பி அமைப்பினரே இவ்வாறான செயல்களிலே முன்னிலையில் உள்ளனர். ஈ.பி.டி.பி யின் பல அலுவலகங்களில் முக்கியமாக தீவகங்களிலே இலவசமாக ரீவி றிசீவர்கள் வழங்கப்பட்டன. யாருக்கு ஓட்டு என்ற ஒரே கேள்வி மஹிந்தவுக்கு என்றவுடன் பரி சாக றிசீவர் கொடுத்த இவர்கள் தற்போது மைத்திரிபால வெற்றிபெற்றவுடன் நிலைமைகள் மாறிப்போயுள்ளன. இவர்கள் ஒட்டுண்ணிபோல் வாழமட்டுமே தகுதியானவர்கள். அப்படிப்பட்டவர்களுடன் எம் தமிழ் இளைஞர்கள் ஒருபோதும் கைகோர்த்துக்கொள்ளக்கூடாது.

இணக்க அரசியல் செய்கின்றோம் என்று கூறிக்கொண்டும் எத்தனை அப்பாவித்தமிழர்களை படுகொலை செய்தார்கள். சிங்கள இராணுவத்துடன் இணைந்து இவர்கள் செய்த படுகொலைகள். காட்டிக்கொடுப்புக்கள் ஏராளம். கடத்தல்கள், காணாமல்ப் போதல்களின் முக்கிய சூத்திரதாரிகள் இவர்களே. இன்றும் தமிழர்களின் நலன்சார்ந்து செயற்படுபவர்களுக்கு அச்சுறுத்தல் விடுவதும் இவர்கள் என்பதனை ஏன் இளையவர்கள் மறந்துவிட்டனர். இணக்க அரசியலின் ஊடாக நாம் வேலைவாய்ப்புக்களை பெற்றுத்தருகின்றோம். அதைச் செய்தோம், இதைச்செய்தோம் என்று கூவித்திரியும் இந்த ஒட்டுக்குழுவினர் புதிதாகஎதனைச்செய்தார்கள்என்பதனை இளைய சமுதாயம் சிந்திக்கவேண்டும்.

சிங்கள அரசு தமிழர்களுக்கு கட்டாயமாகக் கொடுக்கவேண்டிய சலுகைகளை இந்த இனத்துரோகிகள் மூலம் செய்வதனால் தமது ஆதரவினை பெற்றுக்கொள்ளமுடியும் என்று நினைக்கின்றது. வேலைவாய்ப்புகள் கட்டாயமான ஒன்று. அதனைக்கூட இந்த ஒட்டுக்குழுக்களினூடாகச்செய்வதனால் தேர்தல் காலங்களின் தமக்கான வெற்றி வாய்ப்புக்களை அதிகரிக்கலாம் என்று அதனையும் இவர்களினூடகவே செய்கின்றது. இதைவிட இணக்க அரசியல் என்று சொல்லிக்கொண்டு இனத்துரோகம் செய்துகொண்டிருக்கும் இவர்கள் புதிதாக தமிழர்களுக்கு எதை செய்தார்கள். இனப்படுகொலையின் பங்குதாரர்களான இவர்களும் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டிய குற்றவாளிகளே.

யாழ்ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலே நடைபெற்ற வன்முறைச்சம்பவமும் அதற்கெதிராக தமிழினம் என்ன செய்தது என்பதையும் ஆராய்ந்துபார்க்கவேண்டும். எமக்கான பிரதிநிதிகள் எமக்காக பேசிக்கொண்டிருக்கும்போது சில கோமாளிகள் இடையூறு செய்தது மட்டுமல்லாது அவர்களை தாக்கிக் காயப்படுத்தியும் உள்ளார்கள். இதுதான் ஜனநாயகமா? இந்தத் துரோகிகளுக்கெதிராக போர்க்கொடிதூக்கவேண்டிய தமிழர்கள் சிலர் தமக்காகப் பேசி தமக்காகப் போராடிக்கொண்டிருக்கும் வட மாகாண சபைக்கெதிராக யாழ்.பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இது எந்த விதத்தில் நியாயமாகும்.

இளைய சமுதாயம் ஒருபோதும் திசைமாறிச்செல்லக்கூடாது. அக்கினிப் பறவைகளாக மாறவேண்டியவர்கள் பச்சோந்திகளாக மாறக்கூடாது. எம் இனத்துக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராகப் போராடவேண்டியவர்கள் ஒருபோதும் துரோகிகளின் மாயவலைகளிலே சிக்கிக்கொள்ளக்கூடாது. எப்படி எமது போராட்டத்தினை முன்னெடுத்துச்செல்லமுடியும் என்று சிந்திக்கவேண்டும். அரசியல் என்பது சாக்கடை என்று பலர் கூறுவார்கள். ஆனால் அது ஒரு புனிதமான நதி. அதிலே அழுக்கான சிலர் இறங்குவதால்த்தான் அது சாக்கடையாகமாறுகின்றது. இதனை இளையவர்கள புரிந்துகொள்ளவேண்டும் அரசியலில்நல்லதெளிவுபெற்று அரசியல் ரீதியாகப்போராட இளையவர்கள் முன்வரவேண்டும்.

## நபிமொழிகள்

இறுதி தீர்ப்பு நாள். கொடுமைக்காரனுக்கு இருள் மிக்கதாக இருக்கும்.

குத்துச்சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வீரன் அல்ல. மாறாக. கோபம் வரும்போது தன்னைத்தானே அடக்கி கொள்பவனே வீரன் ஆவான்.

எவரையும் பழித்து காட்டுவதை நான் விரும்பவில்லை.

புறம் பேசுவது விபச்சாரத்தை விட கடுமையான பாவமாகும்.

கோள் சொல்பவன் சுவனம் நுழைய மாட்டான்.

நெருப்பு விறகைச் சாம்பலாக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை சாம்பலாக்கி விடும்.

தன் நாவையும். வெட்கத்தலத்தையும் ஒருவர் பாதுகாத்து கொள்வதாக பொறுப்பேற்றால் அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

நாவை அடக்கு. உன்னால் தீய உணர்வுகளை அடக்க முடியும்.

தீமைக்கு பின் அதை அழிக்கவல்ல நன்மையை செய்யுங்கள்.

மௌனம் சாதிப்பது அறிவு நிறைந்த செயல்.

இனிமையான பேச்சும் ஒரு விதத்தில் தர்மம் தான்.

நாணம் நன்மையை மட்டுமே கொணர்கின்றது.

ஒரு வினாடி நேர சிந்தனை. ஓராண்டு கால இறை வணக்கத்தை விடச் சிறந்தது. உம்முடைய உறவை துண்டித்து வாழ்பவனுடன் நீ சேர்ந்து வாழு. உமக்கு அநீதம் இழைத்தவனை மன்னித்து விடும்.

நற்குணம் என்பது நம்பிக்கைக்குரிய அடையாளமாகும். தீயகுணம் என்பது நயவஞ்சகத்தின் அடையாளமாகும்.

உண்மையான வியாபாரி நபிமார்கள். தியாகிகள். நல்லடியார்கள் முதலியோர்களுடன் சுவனத்தில் இருப்பார்.

வணக்க வழிபாடு உள்ள ஒரு உலோபியை விட வணக்க வழிபாடு குறைந்த ஒரு கொடையாளி இறைவனுக்கு மிக சிறந்தவன்.

தர்மத்தில் சிறந்தது இடது கைக்கு தெரியாமல் வலது கையால் கொடுப்பது தான்.

இரசியமாக செய்யும் தர்மம்தான் இறைவனின் கோபத்தை தடுக்கும்.

ஒரு மனிதன் பெற்றோரை ஏசுதல் பெரும் பாவமாகும்.

தன் பெற்றோரை நிந்திப்பவன் தன் மக்களால் நிந்திக்கப்படுவான்.

கல்வி கற்பதானது ஒவ்வொரு ஆண். பெண் மீது கடமையாகும்.

பிள்ளைகள் பேரில் உபகாரமாயிருக்கும் தாய் தந்தையருக்கு இறைவன் அருள் செய்கிறான்.

ஏழைகளின் கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பாகும்.

வணக்கங்களில் மிக இலகுவானதை நான் உங்களுக்கு தெரிவிப்பதானால் அது மௌனம் காக்கும் நாவும். மங்களமான நற்குணமும்தான்.

மிதமிஞ்சிய உணவு அறிவை கெடுத்து. ஆரோக்கியத்தை குறைக்கும்.

## கிறிஸ்துவின் பிறப்பு

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாக இருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும் படிக்கு எல்லோரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும் தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படிக்கு. கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்றும் தாவீதின் ஊருக்குப் போனார்கள். அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில் அவர்களுக்குப் பிரசவ காலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாமலிருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றார். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள். இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கின்றார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்க காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த கணமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். (லூக்கா - 2:1,14)

டிசம்பர் 25ம்திகதி என்றால் இயேசுகிறிஸ்துவின் பிறப்பு என்பது உலகம் அறிந்த உண்மை. அனேக நாடுகளில் டிசம்பர் மாதத்திலும் ஒருசில நாடுகளில் ஜனவரி மாதத்திலும் கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகின்றது. அநேகருடைய நினைவு கிறிஸ்மஸ் வந்தால் சாப்பிட்டு புசித்துக்குடித்து வெறிக்க வேண்டும். சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதே. நீங்கள் புசித்துக்குடித்து வெறிக்கும்படி இயேசு இந்த உலகத்துக்கு வரவில்லை. ஒருவரும் கெட்டொழிந்து போகக்கூடாது என்பதற்காகவே அவர் பூமிக்கு வந்தார். கிறிஸ்மஸ் காலத்தில் நன்மைகளைச் செய்யுங்கள். ஏழை எளியவர்களுக்கு உணவளித்து அவர்களுக்குத் தேவையானதைச் செய்யுங்கள். "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" குருடா. முடவர்களுக்கு இன்றும் விஷேஷமாக உதவி செய்யுங்கள். அப்போது தேவன் உங்களில் பிரியப்படுவார். நீங்கள் உங்கள் தராதரத்திற்கு ஏற்றவர்களுக்கு மட்டும் உதவி செய்து பணக்காரர்களுடன் ஐக்கியப்பட நினைத்து ஏழைகளை உதறித்தள்ளி அவர்களை அற்பமாய் நினைத்திருங்கள். ஏனெனில் இந்த உலகை உண்டாக்கிய தேவன் ஒரு குமாரனை மாட்டுத்தொழுவத்தில் (இக்காலத்தில் நடு பஜாரில் வாகனத் தரிப்பிடத்தில்) பிறந்திருக்கிறான். உன்னை நீ மேன்மையாக எண்ணாதே. ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து முதன்முதலில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது ஏழை எளியவர்களான மேய்ப்பவர்களுக்கே. தேவனுக்குப் பிறந்த இயேசு கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் பிறப்பார்.

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா-2:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்


## பிரேசிலில் மீண்டும் வட்ஸ் அப்




பிரேசிலில் மீண்டும் வட்ஸ் அப் சேவை தொடங்கியுள்ளதாக பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் தனது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். ஸ்மார்ட் கைபேசிகளில் குறுஞ்செய்தி சேவையின் ஜாம்பவானான வட்ஸ் அப். 48 மணி நேரம் பிரேசிலில் தடைவிதிக்கப்பட்டிருந்தது. பிரேசிலில் நடைபெற்று வந்த வழக்கு ஒன்றில், நீதிமன்ற உத்தரவுக்கு வட்ஸ் அப் ஒத்துழைக்க மறுத்தது. எனவே அதன் சேவையை 48 மணிநேரம் நிறுத்தி வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து முடங்கிய சேவை. மீண்டும் தொடங்கியுள்ளதாக பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் தனது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இதன் போட்டி நிறுவனம் ஒன்று. 10 லட்சத்துக்கும் அதிகமான புதிய பயனாளர்களைக் கையாள்வதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## வலியின்போது நீண்டநேரம் பயன் தரக்கூடிய Patch உருவாக்கம்



காயங்கள் போன்றவற்றினால் உண்டாகும் வலியை தணப்படுத்துவதற்கு நீண்ட நேரம் செயற்படக்கூடிய பச் (patch) சினை ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இதிலிருந்து Ibuprofen எனப்படும் பதார்த்தம் 12மணி நேரத்திற்கும் அதிகமாக விடுவிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. அடி காயங்கள், எரிகாயங்கள் போன்றவற்றினால் ஏற்படும் வலிக்கு நிவாரணியாகப் பயன்படுத்தக்கூடிய இந்த பச் ஆனது நீண்டநேரம் பயன்தரக்கூடியதாக இருக்கின்ற போதிலும் குறுகிய நேரத்தில் வலியை போக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

மேலும் இதனை தோலுடன் சேர்த்து ஒட்டக்கூடிய வகையிலான பாரம் குறைந்த பிளாஸ்டிக்கினால் உருவாக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

## ப்ளூடுத் வசதியுடன் ஜீப்ரானிக்ஸின் புதிய ஸ்பீக்கர்



ஜீப்ரானிக்ஸ் நிறுவனம் புதிய 4.1 ஸ்பீக்கர் மொடலை (ZEB-BT4441RUCF) அறிமுகப்படுத்தியுள்ளது. ஜீப்ரானிக்ஸ் நிறுவனத்தின் இந்தப் புதிய மொடலில் 4 ஸ்பீக்கர்களும், 1 சப் வூஃபரும் அமைந்துள்ளது. 60 வோட்ஸ் RMS ஒலித்திறன், ப்ளூடுத் வசதி, ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள FM ரேடியோ. USB மற்றும் SD/MMC பயன்படுத்த வசதி உள்ளன.

சுவரில் மாட்டக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அனைத்தையும் ரிமோட்டில் கட்டுப்படுத்தக்கூடிய வசதியுடன் வருகிறது. இதன் மல்ட்டிமீடியா கண்ட்ரோலர் மற்றும் டிஜிட்டல் டிஸ்ப்ளே ஆகியவை சப் வூஃபரின் முன்பக்கம் வைக்கப்பட்டுள்ளன. மாஸ்டர் வொல்யூம் மற்றும் பேஸ் கண்ட்ரோலர் ஆகியவையும் சப் வூஃபரின் பின்பக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

## முற்றுமுழுதாக மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொலிமர் கண்டுபிடிப்பு



பாவித்த பின்னர் மீண்டும் பழைய நிலைக்கு 100 சதவீதம் மாற்றக்கூடிய ஒரு வகை பிளாஸ்டிக் (Biopolymer) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் Colorado State பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொலிமர் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படக்கூடியதாக இருத்தல் மட்டுமன்றி மீண்டும் பயன்படுத்தக்கூடியதாகவும். பெட்ரோலியம் நீங்கியதுமாகக் காணப்படுகின்றது. மேலும் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 90 கிலோகிராம் வரையான பொலிமர்களை பயன்படுத்துவதாகவும் அவற்றில் அதிகமானவை மீள்சுழற்சிக்கு உட்படுத்தவோ அல்லது உக்கும் தன்மை அற்றவையாகவோ காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஆண்டுதோறும் 270 மில்லியன் கிலோகிராம் பொலிமர் உலகெங்கும் உற்பத்தி செய்யப்படுவதாகவும். அவற்றில் 18 மில்லியன் கிலோகிராம் பாவனையின் பின்னர் கடலில் சேர்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பொலிமர் ஆனது இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## அதிக நேரம் அமர்ந்தே இருப்பதும் ஆபத்து

வேட்டை, வேளாண்மைச் சமூகமாக இருந்தபோது மனிதன் நீண்ட நேரம் நின்றுகொண்டே இருக்க வேண்டியதாக இருந்தது. நடுநடுவே ஓய்வும் ஓட்டமுமாக வாழ்க்கை கழிந்தது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உட்கார்ந்தே வேலை செய்வது அதிகரித்துவிட்டது. தூங்கும் நேரத்தைவிட அமர்ந்திருக்கும் நேரம் அதிகரித்துவிட்டது. இதுகூட பல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

ஒரு நாளில் 8 மணி நேரம் தூக்கம் 16 மணி நேரம் விழித்திருக்கிறோம். நீண்ட நேரம் உட்காரும்போது கால் தசைகளின் மின்னோட்ட செயற்பாடு குறைகிறது. கலோரி எரிப்பு நிமிடத்துக்கு ஒன்று என்ற அளவுக்குக் குறைந்துவிடுகிறது. கொழுப்பை உடைக்கும் என்சைம் அளவு 90 சதவிகிதம் குறைகிறது. ஒரு மணி நேரத்துக்கும் மேல் அமர்ந்திருப்பதால் நல்ல கொழுப்பு அளவு குறைய ஆரம்பிக்கிறது. இன்சுலின் செயற்திறன் குறைகிறது.

தினசரி 30 நிமிடப்பயிற்சி மட்டும் போதாது. உடலை வளைத்து. கால் கட்டை விரல்களைத் தொடுவது போன்ற ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளைச் செய்யலாம். அலுவலகத்தில் நடக்கலாம். அவ்வப்போது எழுந்து, கைகளை விரித்துக் குதிக்கும் ஜம்பிங் ஜாக் செய்யலாம். 1 மணி நேரம் விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற அதிக உடல் உழைப்புக்குச் செலவிடுகிறோம். 4-5 மணிநேரம் அன்றாட வேலைகள், அலுவலகம் அல்லது பள்ளி, கல்லூரிக்குக் கிளம்புவது. பயணிப்பது என மிகக் குறைந்த நேரமே உடல் உழைப்புக்குச் செலவிடுகிறோம். 9-10 மணிநேரம் உட்கார்ந்து வேலை செய்வது, டி.வி பார்ப்பது எனக் கழிக்கிறோம். உட்கார்ந்தே வேலை செய்ய வேண்டியவர்களுக்கு, இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்பு இரட்டிப்பாகிறது. டைப் 2 சர்க்கரை நோய்க்கான வாய்ப்பு 90 சதவிகிதம் அதிகரிக்கிறது. எனவே அதிகநேரம் உட்கார்ந்திருப்பதை தவிர்த்து நடைப் பயிற்சியுடன், சில உடற்பயிற்சியையும் மேற்கொள்ளுங்கள்.



## எய்ட்ஸை கட்டுப்படுத்தும் அதிநவீன ஆணுறை




எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்தும் நவீன ஆணுறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 3 கோடியே 90 லட்சம் பேர் இதுவரை பலியாகி உள்ளனர். ஆனால், இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை, ஆணுறையை பயன்படுத்தினால் எய்ட்ஸ் பரவுவதை தடுக்க முடியும் என சுகாதார அமைப்புகள் கூறுகின்றன. எனவே, ஆணுறையை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. இதை தடுக்கும் வகையில் அதிநவீன ஆணுறை ஒன்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்ஸ்சாசில் உள்ள சுகாதார விஞ்ஞான மையத்தின் பெண் பேராசிரியர் மகுவா சவுத்திரி தலைமையிலான குழுவினர் இந்த ஆணுறையை கண்டுபிடித்துள்ளனர். இந்த ஆணுறை எலாஸ்டிக் பொலிமர் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஹைட்ரோஜெல் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆணுறையில் நுண்ணுயிர்களை கொல்லும் நோய் எதிர்ப்பு மருந்துகள் தடவப்பட்டு இருக்கும். இதை பயன்படுத்தும் போது எய்ட்ஸ் கிருமிகள் நுழைந்து விடாமல் தடுப்பதுடன் எய்ட்ஸ் கிருமிகளையும் கொன்றுவிடும். இதனால் எய்ட்ஸ் பரவுதலை முழுமையாக தடுக்க முடியும் என்று மகுவா சவுத்திரி கூறி உள்ளார். மருத்துவத்துறை ஒப்புதலுக்கு பிறகு இன்னும் 6 மாதத்தில் இது விற்பனைக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது. மகுவா சவுத்திரி இந்தியாவைச் சேர்ந்தவர். அவர் இந்தியாவில் நுண்ணுயிர் துறையில் பட்டம் பெற்று பின்னர் அமெரிக்காவில் படித்தார். அங்கேயே பணியில் சேர்ந்து நவீன கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக்கிடம் கைமாறும் மை ஸ்பேஸ்




பேஸ்புக் ஆனது தற்போதுள்ள பிரமாண்டமான இணைய நிறுவனங்களுள் ஒன்று என்பது அனைவரும் அறிந்ததே. இன்றைய நிலையில் பேஸ்புக் ஆனது 300 பில்லியன் டொலர் பெறுமதியான பங்குகளையும். 01 பில்லியனிற்கும் மேற்பட்ட பயனர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் அந்நிறுவனத்துடன் இணைந்து இயங்குவதற்கு myspace நிறுவனத்தின் தலைமை அதிகாரியான Chris DeWolfe என்பவர் Mark Zuckerberg உடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தியுள்ளார்.

எனினும் இணைந்து இயங்குவதற்கு மறுத்த Zuckerberg 75 மில்லியன் டொலர்கள் செலுத்தி மை ஸ்பேஸினை தாம் விலைக்கு வாங்குவதாக தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கு Chris DeWolfe மறுப்பு தெரிவித்துள்ளார்.


## இணைய வசதி இல்லாமலும் கூகுள் மெப்பை பயன்படுத்தலாம்




கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளுள் ஒன்றான கூகுள் மெப் சேவையின் ஊடாக மில்லியன் கணக்கானவர்கள் பயன்பெறுகின்றனர். தற்போது iOS மற்றும் Android சாதனங்களில் பயன்படுத்தும் கூகுள் மெப் அப்பிளிக்கேஷனுக்கான புதிய பதிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் இணைய வசதி இல்லாத நிலையிலும் (Offline Navigation) இச்சேவையினை பயன்படுத்தக்கூடிய வசதி தரப்பட்டுள்ளது.

இது தவிர அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் கேஸ் விலையினை அறிந்துகொள்ளக்கூடிய வசதியும் இந்த அப்பிளிக்கேஷனில் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். மேலும் இந்த அப்பிளிக்கேஷனை iTunes. Play Store ஆகிய தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

## முடிவை மாற்றியது மைக்ரோசொப்ட்



மைக்ரோசொப்ட் நிறுவனம் OneDrive எனும் ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்கிவருகின்றமை அறிந்ததே. சில தினங்களுக்கு முன்னர் இச்சேவையின் ஊடாக இலவசமாக வழங்கப்படும் 15GB கொள்ளளவை 5GB ஆக குறைக்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

எனினும் பயனர்கள் தெரிவித்த அதிருப்தி காரணமாக அவர்களின் நன்மதிப்பை பாதுகாக்கும் பொருட்டு மீண்டும் 15GB கொள்ளளவையே வழங்க அந்நிறுவனம் முன்வந்துள்ளது. எனவே இலவசமாக 5GB வழங்கப்படும்போது பணம் செலுத்தி கூடிய கொள்ளளவினைப் பெற்றவர்கள் மீண்டும் 15GB கொள்ளளவினை இலவசமாக்கிக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## இந்திய அணியில் இடம்பெறப் போராடும் யுவராஜ். யூசுப் பதான்



உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான இந்திய அணியில் இடம்பெற யுவராஜ் சிங், யூசுப் பதான் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். 2016ம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் டுவென்டி-20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெறுவதற்காக யுவராஜ் சிங் மற்றும் யூசுப் பதான் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது நடைபெற்று வரும் விஜய் ஹசாரே ஒருநாள் போட்டி தொடரில், நான்கு போட்டியில் 243 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சமீபகாலமாக சுரேஷ் ரெய்னாவில் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லாததால் அவர் தொடர்ந்து நீடிப்பதில் சிக்கல் நிலவுகிறது.

இந்நிலையில் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக செயற்படுவதன் மூலம் அணித் தெரிவாளர்களை கவனத்தை யுவராஜ் சிங் ஈர்க்க முயற்சிப்பதாக பேசப்படுகிறது. இதற்கிடையே ஓல் ரவுண்டரான யூசுப் பதான், உலகக்கிண்ண டுவெண்டி-20 போட்டியில் விளையாட விரும்புவதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் கூறுகையில், உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறேன், இது தேசிய அணியில் இடம்பெற வழிவகுக்கும். தற்போது எனது முழுக்கவனம் முழுவதும் உள்ளூர் போட்டிகளில் திறமையை காட்டி, அணித் தேர்வாளர்களை என்பக்கம் திருப்புவதில் தான் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை தட்டிச் சென்றார் செரீனா




அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை தட்டிச் சென்றுள்ளார். இந்த வருடம் அசைக்க முடியாத வெற்றிகளை பெற்ற செரீனா, ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேட்டட் (Sports Illustrated) இந்த வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பெற்றுள்ளார். 32 ஆண்டுகளுக்கு பிறகு வீராங்கனை ஒருவர் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதைப் பெறுவது இதுவே முதன்முறையாகும். கடைசியாக 1983ம் ஆண்டு மேரி டெக்கர் இந்த விருதைப் பெற்றிருந்தார்.

இந்த வருடத்தில் செரீனா தான் சந்தித்த 56 போட்டிகளில் 53ல் வெற்றி வாகை சூடியுள்ளார். இந்த வருடம் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அவுஸ்திரேலியா, பிரெஞ்ச் மற்றும் விம்பிள்டன் ஆகியவற்றில் கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தைக் கைப்பற்றினார். தற்போது 34 வயதானாலும் தன்னுடைய தனித்திறமையால் டென்னிஸ் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறார்.

## மீண்டும் அதிரடி காட்ட வருகிறார் கிறிஸ் கெய்ல்



டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வரும் மேற்கிந்திய தீவுகள் அணியை காப்பாற்ற மீண்டும் அணிக்கு திரும்ப உள்ளதாக கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் ஐபிஎல் போன்ற டி20 போட்டிகளில் விளையாடி வருகிறார். இதனால் சொந்த நாட்டுக்கு விளையாடாமல் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டும் செயற்படுவதாக அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி தொடர்ந்து மோசமாக விளையாடி வருவதால் அணியை காப்பாற்றுவதற்காக மீண்டும் டெஸ்ட் போட்டிக்கு திரும்ப உள்ளதாக கிறிஸ் கெய்ல் கூறியுள்ளார்.

மேலும், தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவில்லை என்றும், அடுத்த ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவேன் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணி, இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 0-2 என இழந்தது. அத்துடன் சமீபத்தில் முடிந்த அவுஸ்திரேலியாவிற்கு எதிரான முதல் டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் போட்டியில் மெக்கலம் அரிய சாதனை



நியூசிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மெக்கலம் ஹாமில்டன் மைதானத்தில் அரிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். நியூசிலாந்து இலங்கை அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி ஹாமில்டன் மைதானத்தில் துவங்கியுள்ளது. முதலில் களமிறங்கிய இலங்கை அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுகள் இழந்து 264 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நியூசிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மெக்கலம் இப்போட்டியில் களமிறங்கியன் மூலம், அறிமுக போட்டியில் இருந்து தொடர்ச்சியாக 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் டிவில்லியர்ஸ் உள்ளார். இந்த வரிசையில் கில்கிறிஸ்ட் (96 போட்டிகள்), ராவிட் (93), சச்சின் டெண்டுல்கர் (84) ஆகியோர் உள்ளனர். மெக்கலத்தின் அறிமுகப் போட்டி மற்றும் 99வது போட்டி இரண்டுமே அவருக்கு ஹாமில்டன் மைதானத்தில் அமைந்து இந்த சாதனைக்கு சிறப்பு சேர்த்துள்ளது. ஆனால் வாழ்நாளில் அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடி எந்த வீரரும் எட்ட முடியாத உச்சத்தில் இருக்கிறார் ஆலன் பார்டர். இவர் தொடர்ச்சியாக 153 டெஸ்ட் போட்டிகளில் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது.

## புனே அணியின் பயிற்சியாளராக ஸ்டீபன் பிளமிங்



ஐபிஎல் தொடரில் புனே அணியின் பயிற்சியாளராக ஸ்டீபன் பிளமிங் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த 2008ம் ஆண்டு நடந்த போட்டியில் சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றொயல்ஸ் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து புனே மற்றும் ராஜ்கோட் அணிகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் புனே அணியில் டோனியுடம், ராஜ்கோட் அணியில் ரெய்னாவும் விளையாடவுள்ளனர். இந்நிலையில் புனே அணியின் பயிற்சியாளராக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளராக செயற்பட்ட ஸ்டீபன் பிளமிங் நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளது. இதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனத் தெரிகிறது.

## காதலியை ஒதுக்கித் தள்ளிய றொனால்டோ



போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர் றொனால்டோ தனது முன்னாள் காதலி இரினா ஷக்கை முழுவதும் மறக்க நினைக்கிறார். றொனால்டோவும், இரினா ஷக்கும் நீண்டகாலமாக தீவிரமாக காதலித்து வந்தனர். இந்த நிலையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருவரும் திடீரென்று பிரிந்துவிட்டனர். தற்போது இரினா, அமெரிக்க நடிகர் பிராட்லே கூப்பரை காதலிக்க தொடங்கிவிட்டார். அதேபோல் றொனால்டோ, தனது ஏஜெண்ட் ஜார்ஜின் மகள் மரிசா மெண்டெசை காதலிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் றொனால்டோ தனது வாழ்க்கை படத்தில் இரினா தொடர்பான காட்சிகள் ஏதும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்கிறாராம். இது பற்றி றொனால்டோ கூறுகையில், "வாழ்க்கையில் நடக்கும் மோசமான விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை" என்று கூறியுள்ளார். அந்த படத்தின் இயக்குனர் ஆண்டனி கூறுகையில், படத்தின் நீளம் காரணமாக, றொனால்டோ இரினாவுடன் உணவு சாப்பிடுவது போன்ற காட்சிகளை நீக்கி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## அழிவை நோக்கி மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி - பிராவோ



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகம் சீர்கெட்டு கிடப்பதாக அந்த அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ குற்றம் சாட்டியுள்ளார். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியத்திற்கும், வீரர்களுக்கும் இடையே மோதல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இதன் காரணமாகவே பிராவோ 2015 உலகக்கிண்ணப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார். இந்நிலையில் தற்போது அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ் லீக் தொடரில் விளையாடி வருகிறார்.

இது தொடர்பாக பேசிய பிராவோ, "மேற்கிந்திய தீவுகள் அணியில் உலகத்தரமான வீரர்கள் உள்ளனர். ஆனால் பயிற்சிக்கு தேவையான மைதானம், கிரிக்கெட் அகடமி உள்ளிட்ட ஏதும் இல்லை. மேலும், கிரிக்கெட் வாரியத்திற்கும் வீரர்களுக்கும் இடையே உறவு வலுப்பட வேண்டும். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியத்தில் அரசியல் நடக்கிறது. இதனால் கிரிக்கெட் அணி அழிவை நோக்கிச் செல்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலியாவில் அதிரடிக்கு தயாராகும் குமார் சங்கக்கார



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ் லீக் தொடரில் களமிறங்கவுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும், விக்கெட் கீப்பருமான சங்கக்கார, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியோடு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது கவுண்டி போட்டியிலும், பல்வேறு டி20 போட்டிகளிலும் ஆடி வருகிறார். சமீபத்தில் முடிந்த வங்கதேச லீக் போட்டியில் ஆடிய சங்கக்கார அதிரடி காட்டி அசத்தினார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ் லீக் தொடரில் ஹொபார்ட் அணிக்காக விளையாட உள்ளார். இது பற்றி பேசிய சங்கக்கார, "ஓய்வு பெற்ற பிறகு நாட்டிற்காக விளையாடியதை விட அதிக வாய்ப்புகள் கிடைக்கிறது. ஆனால் இதுவித்தியாசமான உணர்வைத் தருகிறது. அனைத்தையும் தக்க வைத்துக்கொள்ள தற்போது அதிக வாய்ப்புகள் கிடைக்கிறது. தற்போது உள்ள நிலையில் உலகின் அனைத்து பகுதியிலும் சென்று ஆட முடிகிறது. மேலும், எனது உடல்நிலையை பொறுத்தவரை சிறப்பாக உணர்கிறேன். சிறப்பான பயிற்சியின் மூலம் ஹொபார்ட் அணியில் அசத்துவோம்" என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக இந்தியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரை அந்த அணி நிர்வாகம் நியமித்துள்ளது. இந்திய அணியில் பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் துவக்க ஆட்டக்காரராக களமிறங்கி சிறப்பாக செயற்பட்டவர் மனோஜ் பிரபாகர். வேகப்பந்துவீச்சாளரான இவர், ஒருநாள் ஆட்டத்தில் 96 விக்கெட்டுகளும், டெஸ்டில் 157 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார். மேலும் முதல் தர கிரிக்கெட்டில் 385 விக்கெட்டுகளையும் சாய்த்துள்ளார். டெல்லி மற்றும் ராஜஸ்தான் அணிகளின் பயிற்சியாளராக செயற்பட்டு வந்துள்ள இவரை தற்போது ஆப்கானிஸ்தான் அணியின் பயிற்சியாளராக அந்த நாட்டின் கிரிக்கெட் அணி நியமித்துள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறும் 20 ஓவர் உலகக்கிண்ண தொடர் வரை அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் அணிக்கு உள்ளூர் மைதானமாக டெல்லி நொய்டாவை கிரிக்கெட் வாரியம் அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தை இருநாட்டு கிரிக்கெட் வாரியங்களும் செய்து உள்ளன என்பது குறிப்பிடத்துக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## ரஷ்ய ஜனாதிபதி 100 வருடங்கள் சாகாமல் வாழ்கிறாரா?




ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர் புதின் 100 ஆண்டுகளுக்கும் மேலாக சாகாமல் உயிருடன் வாழ்ந்து வருவதை நிரூபிக்கும் வகையில் வியப்பான புகைப்படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. உலக வல்லரசு நாடுகளின் தலைவர்களில் ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர் புதின் தவிர்க்கமுடியாத ஒருவர். கடந்த செப்டம்பர் மாதம் முதல் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக களத்தில் குதித்ததற்குப் பிறகு உலகம் முழுவதும் அவரை ஒரு ஹீரோவாக பார்த்து வருகின்றனர்.

இந்நிலையில், விளாடிமிர் புதின் சாகாவரம் பெற்று 100 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார் என இணையத்தளங்களில் புரளியை பரப்பி வருகின்றனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் சில புகைப்படங்களையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதில், கடந்த 1920ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தில் விளாடிமிர் புதினை பிரதிபலிக்கும் இராணுவ வீரர் ஒருவரின் புகைப்படம் இடம்பெற்று இருக்கிறது. இது உண்மையில் விளாடிமிர் புதின் என்றால், புகைப்படம் எடுக்கப்பட்ட அந்த ஆண்டில் அவருக்கு 20வயது இருந்திருக்கும் என்றும், தற்போது 2015ம் ஆண்டில் அவருக்கு 115வயது நிறைவடைந்திருக்கும் என மதிப்பிட்டுள்ளனர். மேலும், அதே புகைப்படத்தில் 1941 மற்றும் 2015ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்டுள்ள புகைப் படங்களிலும் விளாடிமிர் புதினின் தோற்றம் மாறாமல் இளமையாகவே காட்சி அளிப்பதுபோல் காணப்படுவதாக சில வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். விளாடிமிர் புதினின் இந்த இளமை தோற்றத்திற்கு அவர் தினமும் தவறாமல் நீச்சல், குதிரையேற்றம் என பலவகை யான உடல் பயிற்சிகளில் ஈடுபடுவதால் எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். ஆனால், இந்த கருத்துக்களை ஆய்வு வல்லுனர்கள் முற்றிலுமாக மறுத்துள்ளனர். தற்போது 63 வயதாகும் புதினிற்கு சாகாதவரம் என எதுவும் கிடையாது. புதினிற்கும் வயதாகி வருகிறது என இணையத்தள புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

## சுயநினைவை இழக்கும் வரை சித்திரவதை செய்யப்பட்டேன்




ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கி பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான யாஸிதி பெண், ஐ.எஸ் தீவிரவாதிகளை அழித்துவிடுமாறு ஐநாவிற்கு கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஈராக்கில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்துவந்த நாதியா முராத் பாசீ தாஹா என்ற பெண்ணையும் மற்றும் சில பெண்களும் ஐ.எஸ் தீவிரவாதிகளின் தலைமையிடமான மோசூல் நகருக்கு கடத்திச்செல்லப்பட்டுள்ளனர். அங்கு பெண்களின் உடல்கள் இறைச்சியை விற்பதுபோன்று விற்கப்பட்டன. கொடூர கொடுமைகளுக்கு ஆளான நாதியா(21) என்ற பெண் அங்கிருந்து தப்பித்துள்ளார், இவர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் போரின் போது கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக விசாரிக்கும் 15 நபர்கள் கொண்ட குழு விடம் தனக்கு நடந்தவை பற்றி கண்ணீர் மல்கக் கூறியுள்ளார்.

தீவிரவாதிகளுக்கு பணிவிடைசெய்ய வற்புறுத்தப்பட்ட நான், சுயநினைவை இழக்கும்வரை அவர்களால் சித்திரவதை செய்யப்பட்டேன், என்னுடைய சகோதரர்கள் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டனர். இனி வாழவே முடியாது என்கின்ற அளவுக்குயாஸிதிபெண்களுக்கு கொடூரம் அரங்கேற்றப்பட்டது. இவ்வாறு பல்வேறு அட்டூழியங்களை செய்துவரும் அவர்களை அழிக்கவேண்டும் என அவர் கூறியுள்ளார். இவரின் பேச்சை கேட்ட பாதுகாப்பு கவுன்சில் இவரை பாராட்டியதோடு மட்டுமல்லாமல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் இவ்வழக்கை எடுத்துச்செல்ல வலியுறுத்தியுள்ளது. சமீபத்தில், ஈராக்கில் யாஸிதி பெண்களை நிலத்திற்கு அடியில் இருட்டிய அறையில் சிறைபிடித்து வைத்திருந்த இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


## 1,000 இஸ்லாமியர்களைக் கொன்று குவித்த இராணுவம்



நைஜீரியாவில் ஷியா பிரிவு இஸ் லாமியர்களுக்கும் அந்நாட்டு இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில் 1,000க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் சுட்டு கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் ஐ.எஸ் தீவிர வாதிகளுடன் தொடர்புடைய போகோஹராம் என்ற தீவிரவாத அமைப்பு இயங்கி வருகிறது. போகோ ஹராம் தீவிரவாதிகள் ஷியா இஸ்லாமியர்கள் என்பதனால், அந்நாட்டில் உள்ள ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் ராணுவத்தின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமை ஆகிய இரு தினங்களில் சரியா என்ற நகரில் ஷியா இஸ்லாமியர்களுக்கும் ராணுவத்திற்கும் இடையே மோசமான கல வரம் வெடித்துள்ளது. இந்த தாக்குதலில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களை ராணுவத்தினர் இரக்கமின்றி கொன்று குவித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், அரசு இதனை மறுத்துள்ளது. எனினும், உலகின் பார்வையில் இருந்து மறைக்க சரியா நகரில் கொல்லப்பட்ட இஸ்லாமியர்களை அரசு அதி காரிகள் ரகசியமான இடங்களில் புதைத்து வருவதாக தற்போது தகவல்கள் வெளியா கியது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், இராணுவத் தள பதியை ஷியா இஸ்லாமியர்கள் கொல்ல திட்டம் தீட்டியதை தொடர்ந்து தான் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், இந்த தாக்குதலில் 20க்கும் குறைவானவர்களே இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் மீது நடத்தப்பட்ட இந்த வெறித்தனமான தாக்குதல் குறித்து நேர்மையான மற்றும் விரைவான விசாரணை நடத்தவேண்டும் என நைஜீரியாவில் உள்ள அமெரிக்க தூதரகமும், மனித உரிமைகள் அமைப்பும் வலியுறுத்தியுள்ளது.

## தைவானுக்கு ஆயுதங்களை விற்கும் அமெரிக்கா – எச்சரிக்கும் சீனா



தைவானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனா அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த 1949ஆம் ஆண்டு நடைபெற்ற உள்நாட்டு போருக்கு பிறகு சீனா மற்றும் தைவானுக்கு இடையே தொடர்பு இல்லாமல் போனது. சீனாவின் ஒரு பகுதியாக இருந்தாலும் தைவான் நாட்டு உரிமை சீனாவுக்குக் கிடையாது. எனினும் தைவானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி தான் என சீனா தொடர்ந்து கூறி வருகிறது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்து வருகிறது. தைவானுக்கு ஆதரவாக அமெரிக்கா பல்வேறு உதவிகளை செய்துவருகிறது. அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் வழங்கி வருகிறது.

இந்நிலையில் சுமார் 1.83 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை தைவானுக்கு விற்பனை செய்யப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. கனரக தாக்குதல் வாகனங்கள், விமானம், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. மேலும் புலனாய்வு மற்றும் கண்காணிப்பு உபகரணங்களையும் அமெரிக்கா வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவு சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக சீனாவின் துணை வெளியுறவு மந்திரி சென்ஷ காங் கூறியதாவது, எங்கள் நாட்டை ஒட்டிய பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. சர்வதேச சட்டங்களை மீறி அமெரிக்கா தற்போது தைவானுக்கு ஆயுதங்களை விற்றுள்ளது. இதனால் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். எனி னும் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தைவானுக்கு ஆயுதங்களை வழங்கி இருப்பதாகவும் இதில் சர்வதேச விதிமுறை மீறல் எதுவும் இல்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## பேஸ்புக், டுவிட்டர், கூகுள் நிறுவனங்களுக்கு கடும் கட்டுப்பாடுகள்




ஜேர்மனி நாடு முழுவதும் சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள் ஆகிய நிறுவனங்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் நடைமுறைக்கும் வருகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜேர்மனி நாட்டில் புகலிடம் கோரி வருகை தரும் சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச்சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை வரலாறு காணாத வகை யில் அதிகரித்து வருகிறது. அண்மையில் வெளியான செய்தியில், ஜேர்மனிக்குள் இந்த ஆண்டு இறுதி வரை சுமார் 10 லட்சம் அகதிகள் வருவார்கள் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஜேர்மனியில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனால், அவர்கள் மீதான இனவெறி தாக்குதலும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள் வழியாக அகதிகளை கடுமையான சொற்களை பயன்படுத்தி சாடி வருகின்றனர். இதனால் ஜேர்மனி நாட்டின் மதிப்பு வெளிநாடுகளிடையே பாதித்து வருவதாக புகார்கள் எழுந்தது. இதனைத்தொடர்ந்து, பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள் நிறுவனங்களின் உயர் அதி காரிகளுடன் ஜேர்மன் சட்ட அமைச்சரான Heiko Maas உள்ளிட்ட அதிகாரி கள் அவசர ஆலோசனை ஒன்றை நடத்தி யுள்ளனர்.

இதில், 'சமூக வலைத்தளங்களில் தற்போது பரவிவரும் இனவெறியைத் தூண்டும் விதமான தாக்குதல்கள், மத துஷ்பிரயோகம் உள்ளிட்ட மோசமான கருத்துக்களை நீக்கவும், எதிர்காலத்தில் இதுபோன்ற கருத்துக்களை பரப்பாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு நிறுவன அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டது. ஜேர்மன் அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்ற பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள் நிறுவன அதிகாரிகள் 'அடுத்த 24 மணி நேரத்திற்குள் சமூக வலைத்தளங்களில் உள்ள மோசமான கருத்துக்கள் நீக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் இதுபோன்று நிகழாதவாறு கண் காணிக்கப்படும்' என அவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

## வட கொரிய அதிபருக்கு எதிராகச் சதி



வட கொரிய அதிபருக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டியதாகக் கூறி மத போதகராக செயற்பட்டு வந்த நபருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. வட கொரியாவின் அதிபராக கடந்த 2011, டிசம்பர் 17 ஆம் திகதி முதல் ஆட்சி செய்து வருபவர் Kim Jong-un. சர்வாதிகாரியாக செயற்பட்டு வரும் இவருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாகக் கூறி தென் கொரியாவில் பிறந்த கனேடியரான மத போதகரை கடந்த ஜனவரியில் கிம் அரசு கைது செய்துள்ளது.

60 வயதான மதபோதகர் Hyeon Soo Lim மீதான விசாரணையின் முடிவில் அவர் குற்றவாளியென நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக மருத்துவ ரீதியாகவும், சிறுவர்களுக்கான கல்வியை மேம்படுத்தும் நோக்கிலும், அநாதைகளை பாதுகாக்கும் வகையிலும் வட கொரிய பகுதிக்கு வந்து சென்று கொண்டிருப்பவர் போதகர் லிம். அதிபர் கிம்முக்கு எதிராக கிளர்ச்சியாளர்களை ஒருங்கிணைத்து தூண்டி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இவரை, கிம் அரசின் விசாரணை அதிகாரி கள் வலுக்கட்டாயமாகக் குற்றத்தை ஒப்புக்கொள்ள வைத்துள்ளதாக போதகரின் குடும்பத்தினர் குற்றஞ் சாட்டியுள்ளனர். வெளிநாட்டில் இருந்து தொடர்ந்து வட கொரியா வந்து செல்லும் மத போதகர்கள் அல்லது தொண்டாற்ற வருபவர்களை கிம் அரசின் அதிகாரிகள் கைதுசெய்து கிளர்ச்சியாளர்கள் என குற்றஞ்சுமத்தி தண்டனை வழங்கியதும் உண்டு என போதகர் லிம் குடும்பத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிபர் கிம் அர சின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கில் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுடன் இணைந்து போதகர் லிம் செயற்பட்டதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் உள்ள விமான நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்த இஸ்லாமிய ஊழியர்கள் தாடியை நீளமாக வைத்திருந்த காரணத்திற்காக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு பதிலளித்த விமான நிலைய அதிகாரிகள், 'இருவரும் விமான நிலைய விதிமுறைகளை பின்பற்றவில்லை என்பது முதல் குற்றச்சாட்டு எனத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## வின்டேஜ் கார்கள், ஸ்போர்ட்ஸ் கார்கள் வடிவமைப்பில் அறைகளைக் கொண்டுள்ள ஹோட்டல்





கார் பிரியர்களை மனதில் வைத்து வடிவமைக்கப்பட்ட 4 ஸ்டார் ஹோட்டல் இது. மொத்தம் 34 அறைகள் இருக்கின்றன. அதில் 10 அறைகள் வின்டேஜ் கார்கள், கிளாஸிக் கார்கள், ஸ்போர்ட்ஸ் கார்கள் வடிவமைப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றன. படுக்கைகள் ஒவ்வொன்றும் ஒரு வின்டேஜ் காரை நினைவுபடுத்துகின்றன. வி8 என்பது கார்களில் பொருத்தப்படும் இன்ஜினின் பெயர். அதே பெயரை ஹோட்டலுக்கு வைத்துவிட்டார்கள்.

ஹோட்டல்களுக்குள் நுழைந்தால் ஏதோ வின்டேஜ் கார் ஷோ ரூமுக்குள் புகுந்துவிட்டது போல் கார்கள் வரிசை கட்டி நிற்கின்றன. ஹோட்டல் அமைந்திருக்கும் இடமும் புகழ்பெற்ற கார் சந்தையான ஸ்டட் கார்டில் உள்ளது. ஜெர்மனியின் பழைய விமான நிலையம் இந்தப் பகுதியில் முன்பு இருந்ததால் பாரம்பரியமும் கொண்டதாக இருக்கிறது. தீம் ரூம்களில் இருவர் ஓர் இரவு தங்குவதற்கு 175 யுரோ கட்டணமாகப் பெறப்படுகிறது.

## பனிக்கட்டிகளால் உருவான 10 அடி நீள யானை சிலை

ஸ்வீடன் நாட்டில் சுக்கச்ஜர்வி என்ற கிராமத்தில் உள்ள ஐஸ் ஹோட்டல் மிகவும் புகழ்பெற்றது. முழுக்கமுழுக்கப் பனிக்கட்டியைக்கொண்டு இந்த ஹோட்டல் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் வித்தியாசமான தலைப்புகளில் இந்த ஹோட்டல் வடிவமைக்கப்படுகிறது. நூறு பேர் இந்த பனிக்கட்டியைக் கொண்டு அழகான வடிவமைப்புகளை உருவாக்குகிறார்கள். கதகதப்பாக ஆறு முதல் எட்டு வாரங்களில் அற்புதமான வடிவமைப்புத் தயாராகி விடுகிறது.




ஐயப்பா நகையகம்
22கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
T.P 0776946421
தண்ணீரூற்று, முள்ளியவளை

கோசலா புடவைமாளிகை
அனைத்து விதமான பட்டுப்புடவைகள், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான அனைத்து விதமான ஆடைகளையும் இங்கு மலிவாக பெற்றுக்கொள்ளலாம்
தண்ணீரூற்று, முள்ளியவளை. T.p. 0778371266

வேலவன் புடவையகம்
அனைத்து விதமான புடவைகள், பாதணிகள், அழகுசாதனப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்
முல்லை வீதி, தண்ணீரூற்று T.P 0773693849

Reg. No: 2820
S.L.G Aluminium (PVT) LTD
Dealers in Aluminium Executive Accessories Glass, Mdf, Ceiling Items Fabricator of Aluminium Door, Window Partition all Aluminium Works, an Curtain Work etc
No; 48/4 Kanthasamy Kovil Road,
T.P 0242228181, 0776404333

KJ Kayalini JEWELLERS
கயலினி ஜுவலர்ஸ்
Bus Stand, Point Pedro. Tel . 0770584367

Satellite System Intallition, all Types of Satellite Dish Antennas, TV Antennas an Accessorise.
TV, Antena, Cable, Association, Recharge
Lanka Sat Systems
OVER 20 YEARS EXPERIENCE IN SATELLITE FIELD
The Dish Doctors
#64, 1st Floor, New Bus Stand Complex, Vavuniya, Sri Lanka.
Tel:(+94) 24 2227499, 072 3623593, 0773201764
E-mail: newlankasat@ymail.com
Web : www.lankasatsystems.com

Y2K Leather Works
No.63, Amman Temple Road, pandariKulam, Vavuniya.
தரமான முறையில் அனைத்து வாகனங்களிற்குமான சீற்ஸ் வகைகள், ஆட்டோ கூ... தைத்து கொடுக்கப்படும்
T.P- 0767334416

சுபா சலூன்
கண்டி வீதி, வவுனியா.
(கல்வித்திணைக்களம் முன்பாக)
T.P - 0770790315

சாரு நகை மாடம்
SARU Jewel Palace
Manufacturers Gold Jewels
22கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
முல்லை வீதி, புதுக்குடியிருப்பு T.P 0772880781 Mullai Road, Puthukkudiyiruppu

அன்பான வாசகர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும்...
தினப்புயல் பத்திரிகை மற்றும் இணையத்தளத்தின் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள்.

இந்தியன் பெஷன்
INDIAN Fashion
(direct Importers & Whole Sale Dealer in All Kinds Of Foot wear)
Agent for NIPON Kids Wear
T.p. 0766447320 0777916362
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு

Sj
சகானா நகை மாடம்
SAKANA Jewllers
For Genuine 22 ct Gold Jewellery
முல்லை வீதி, தண்ணீரூற்று.
Mullai Road, Thanneeroottu. Tel: 077-2178666

Yarl Beach Hotel
A/C, NON-A/C ROOMS WEDDING HALL & RESTAURANT
Jaffna Road, Karanavai North, Karaveddy e-m :- yarlbechhotel@gmail.com T.P-0212261567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.12.2015 அன்று வெளியிடப்பட்டது.